68

R. No. M. 2445.

உ

சிவமயம்.

"வீரசைவம்"

திங்கள் வெளியீடு.

OFFICE OF THE REGISTRAR ... 4 JUL 1930

மலர்	சுக்கில—தை, மாசி, பங்குனி	இதழ்
உ	1930—ஜனவரி பெப்ருவரி, மார்ச்சு.	க, உ, ௩

க. முதலாவதாண்டின் பொருளடக்கம்.
உ. கடவுள் வணக்கம்.
௩. தமிழ்நாட்டில் வீரசைவ சமயம்.
௪. [illegible] பூசித்தல்.
௫. ஸ்ரீ பசவேச விஜயம்.
௬. மெய்யுணர்தல்.
௭. வீரசைவமதத்தின் உண்மைநிலை.
௮. தமிழ்நாட்டு நிகழ்ச்சிகள்.

பத்திராசிரியர் { வீ. குமாரவீரையர்,
வீரசைவ நிலையம், முசிரி, (திருச்சி ஜில்லா)

சந்தா நேயர்கட்கோர் விண்ணப்பம்.

ஐயன்மீர்!

நமது வீரசைவம் இறைவனருளால் முதலாவதாண்டு நிறைவுற்று இரண்டாவதாண்டு தொடங்கியிருக்கின்றது. இவ்வாண்டில் இதற்கென அச்சுக்கூடம் நிறுவுவதைப்பற்றியும், வேறு அச்சுச்சாலையில் மாற்றிக்கொண்டு அரசாங்கத்தார் உத்தரவைப் பெறுதலைப் பற்றியும் இரண்டு மாதங்களாக உரியகாலத்தில் வெளிவராது நின்றிருந்தது. இதனால் இப்பத்திரிகை நின்று விட்டதோ? எனவும், விடாது ஊக்கத்துடன் நடத்துக! எனவும் வந்த கடிதங்களால் உண்மை நேயர்கள் இன்னாரென அறிதற்கும் இடமாயிற்று. இப்பத்திரிகை மாதந்தோறும் முதல்வாரத்தில் வெளிவர வேண்டியதால் இம்மாதத்தில் நடந்தவரை 3 இதழ்களும் வெளிவரலாயின. இனி அடுத்த மாதமுதல் தவிராது உரியகாலத்தில் வேண்டுமளவில் வெளிவரும். சந்தாநேயர்கள் தாழ்த்தமைக்கு மன்னிப்புடன் சந்தாத் தொகையை அடுத்த இதழ் வெளிவருவதற்குள் மணியார்டர்மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது வரும் V. P. P.யைப் பெற்றுக் கொண்டு அபிமானித்தல் வேண்டும். மணியார்டர் அனுப்புவதால் மூன்றணா லாபமிருத்தலோடு எமது வேலையைக்குறைத்த உபகாரமும் ஆம் என்பதை நேயர்கள் சிந்தித்தல் வேண்டுமென வேண்டுகின்றோம்.

இங்ஙனம்,

நிறைவேற்றுக் கழகத்தார்.

உ

சிவமயம்.

பொம்மபுரம் 18-வது பட்டம்

ஸ்ரீமத் சிவஞானபாலையசுவாமிகள்.

OFFICE OF THE REGISTRAR
4 - JUL 1930

ஆலய மெனக்கொண் டெம்மனத் தமர்ந்த வருட்சிவ ஞானதே சிகவெம்
பாலைய மலர்க்கண் ணிரண்டுடை யாய்க்குப் பார்வைமூன் றுளனெனப் படு
மேலவ னென்னி லவற்குநா லிருகண் விண்ணவனுயர்ந்தவன வற்குச் [வோன்
சாலவு மதிக னுவனு யிரங்கட் டவளமார் கவளவா ரணனே.

OFFICE OF THE REGISTRAR ... MADRAS
4 - JUL 1930

சிவமயம்.

வீரசைவம்.

முதலாவதாண்டின் பொருளடக்கம்.

விபவ தைமுதல் சுக்கில மார்கழிவரை.

1. பத்திராசிரியர் :—
க. முன்னுரை, இதழ் க.
உ. வீரசைவ பஞ்சாசாரிய பீடங்களும், அவற்றின் தொன்மையும், இதழ் க, உ, ங, ச, ரு.
ங. இஷ்டலிங்க வபிஷேகமாலை யுரை, க, உ, ச, ரு, எ, அ, கூ, ௰உ.
ச. காலத்தின் அருமையும் நமது கடமையும், ங, ச, ரு, சு, எ.
ரு. ஸ்ரீ சிவஞானபாலைய தேசிகாதீன பீடமும், அதன் பெருமையும், இதழ் ங, ச, ரு, சு, எ.
சு. தமிழ்நாட்டு வீரசைவ சித்தாந்த மகா சங்கத்தின் ஆறுவதாண்டு விழாநிகழ்ச்சி, இதழ் அ.
எ. வீரசைவ விசேட இலக்கணங்கள், கூ, க0.
அ. கர்ப்பலிங்கதாரணம், கஉ.

2. திருவாளர் G. சிக்கவீரப்பா, B. A., L. L. B., வழக்கறிஞர், டெங்கணிக்கோட்டை.
க. ஐந்தாவதாண்டுத் தலைவர் முன்னுரை, க, உ, ங.
உ. ஸ்ரீ பசவேச விஜயம், சு, எ, அ, கூ, க0, கக, கஉ.

3. ,, S. ஏகாம்பர ஐயர், தமிழ்ப் பண்டிதர், பச்சையப்பர் ஹைஸ்கூல், காஞ்சீபுரம்.
க. வீரசைவம், இதழ் உ, ங, ச, சு.

4. ,, S. கந்தசாமி ஐயர், உபாத்தியாயர், தேத்தாக்குடி.
க. அட்டாவரணம், உ, ங, ச.
உ. நமது பத்திரிகையின் முன்னேற்றம், க0.

5. ,, லா. சா. வைத்திலிங்கையர், சுதேச வைத்தியர், பெருவளநல்லூர்.
க. உண்மையுணர்வு, இதழ் ங, ச, ரு.

6. ,, பண்டித. ந. மு. வேங்கடசாமி நாட்டார், தமிழ் விரிவுரையாளர், பிஷப் ஈபர் கல்லூரி, திரிச்சிராப்பள்ளி.
க. கடவுள் வாழ்த்து (திருக்குறள்), ங.

7. ,, பண்டித, அ. கந்தசாமி பிள்ளையவர்கள், தமிழ் விரிவுரையாளர், அரசியலார் கல்லூரி, கும்பகோணம்.
க. சிவப்பிரகாச சுவாமிகளும் அவர் நூல்களும், ச, ரு, சு.

உ. பெண்பாலர், இதழ் எ, அ.
ந. வேடிக்கைத் துணுக்குகள், அ.
ச. சொற்பெருக்கு, க0.
ரு. சோணசைலமாலை, கக.

8. ,, ஆஸ்தான வித்துவான், சிரசி. குருசாந்த சாஸ்திரிகள், "பிரபா" பத்திராசிரியர், மைசூர்.
க. பஸ்மதாரணம், இதழ் சு, எ.
உ. தீக்ஷை, கூ.
ந. சுதருமம், க0.
ச. சமஸ்காரம், க0.
ரு. சிவநிர்மாலிய சுவீகாரம், கக.
சு. சிவசர்வோத்தமத்துவம் கஉ.

9. ,, S. M. ஆறுமுகாரியர், வீ. பிரசாரகர், தம்மம்பட்டி.
க. வீரசைவப் பிரசாரம், இதழ் எ.
உ. வீரசைவ வைதீகத்துவம், இதழ் அ, க0.
ந. இலிங்கதாரண வைதீகத்துவம், கக.

10. ,, விருபாக்ஷ சாஸ்திரிகள், புராணீகர் மடம்.
க. சிவபூசையின்பெருமையும் இன்றியமையாமையும் அ.

11. ,, P. கல்யாணவீரய்யர், உபாத்தியாயர், கானக்கிளியனூர்.
க. வீரசைவர்களின் முன்னேற்ற வழிகள், அ.

12. ,, குருசாந்த சாஸ்திரிகள், ஹிரே மடம்.
க. வீரசைவமதமும் அதன்புகழ்தற்குரிய நிலைபேறும் கூ.

13. ,, உருத்திரசாமி ஐயர் அவர்கள், தமிழ்ப் பண்டிதர், ஞானியார் பாடசாலை, திருப்பாதிரிப்புலியூர்.
க. அட்டாவரணம் (குரு), கூ.
ந. பிரபுதேவர், க0.
ந. கயிலைநாதன் அல்லமனைப் புகழ்தல், கக.
ச. மாயை பூமிக்கு வருதல், கஉ.

14. ஓர் மதசேவகன், ஓர் வேண்டுகோள், க.

15. பிரபாப்பிரியன், ஆசாரமே ஆரோக்கிய சாதனம், கூ.

16. திருவாளர், S, தியாகராஜய்யர், தமிழாசிரியர், ம. அரசூர்.
க. வீரசைவப் பெரியார்கட்கோர் வேண்டுகோள், கூ.

17. ஸ்ரீமத் சிவப்பிரகாச சுவாமிகள், கைத்தலமாலை, கஉ.

18. ஓர் வீரசைவன். தென்னாட்டு வீரசைவர்களின் கடமை, உ.

19. தமிழ்நாட்டு நிகழ்ச்சிகள்—க, உ, ந, ச, ரு, சு, அ, க0, கக.

20. வடநாட்டு நிகழ்ச்சிகள்—க, உ, கூ, கக, கஉ.

கட்டுரையின் பின்னருள்ள எண்கள் இதழ்களின் எண். நிகழ்ச்சியனைத்தையும் வட, தமிழ்நாட்டு நிகழ்ச்சிகளிற் காண்க.

உ

சிவமயம்.

"வீர சைவம்."

பிரமபுரம் ஸ்ரீ சிவஞானபாலைய சுவாமிகள் அருளால்

மகாசங்கத்தினின்றும் வரும்

செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.

மலர் உ.	சுக்கில—தை, மாசி, பங்குனி. 1930—ஜனவரி, பெப்ருவரி, மார்ச்சு.	இதழ் க, உ, ந.

(கடவுள் வணக்கம்)

1. *பஞ்சாநந தநுத்பூதாந் பஞ்சாக்ஷர மநூபமாந்*
பஞ்சஸூத்ர க்ருதோவந்தே பஞ்சாசார்யாந் ஜகத்குரூந்.

2. முருகனே செந்தி முதல்வனே மாயோன்
மருகனே யீசன் மகனே——யொருகைமுகன்
றம்பியே நின்னுடைய தண்டைக்கா லெப்பொழுதும்
நம்பியே கைதொழுவே னன்.

3. உன்னை யொழிய வொருவரையு நம்புகிலேன்
பின்னை யொருவரையான் பின்செல்லேன்—பன்னிருகைக்
கோலப்பா வானோர் கொடியவினை தீர்த்தருளும்
வேலப்பா செந்திவாழ் வே.

4. பங்க வளற்று வழிமாற்றி யொருநல் வழியைப் பகர்வார்போற்
றங்கண் மதியிற் பலபிதற்றுஞ் சமய ருரைக டமைநீக்கி
யங்க நிலையிற் றிலிங்கநிலை யிற்றேன் றருளும் வீரசைவ
சிங்கநிலைத்த வருட்சென்ன வசவன் றிருத்தாள் சிரத்தணிவாம்.

5. மறைமுதற் கிளந்த வாயான் மதிமுகிழ் முடித்த வேணி
யிறைவர்தம் பெயரை நாட்டி யிலக்கணஞ் செய்யப் பெற்றே
யறைகடல் வரைப்பிற் பாடை யனைத்தும்வென் றாரி யத்தோ
டேற்தரு தமிழ்த்தெய் வத்தை யுண்ணினைந் தேத்தல்செய்வாம்,

தமிழ்நாடும் வீரசைவ சமயமும்.

மாண்புமிக்க சமயாபிமானச் செல்வர்களே!

"வடவேங்கடந் தென்குமரி யாயிடைத் தமிழ்கூறு நல்லுல கத்து" என்னும் இத்தொடர்மொழிப் பொருளைநோக்க வடக்கின் கண் திருவேங்கட மலையும், தெற்கின்கண் குமரியும் ஆகிய இவ் வெல்லைக்குட்பட்ட நாடே தமிழ் நாடெனவும், அதுவே மக்களாவார் கல்வி, ஒழுக்கம், நாகரிகம், சமயப்பற்று முதலியவற்றாற் சிறந்து அறிவு விளக்கமுற்று இம்மையிற் புகழும் மறுமையில் வீடும் எய்து தற்குரிய நலன்களனைத்தும் அமையப்பெற்ற உயர்ந்த நாடெனவும் அறிகின்றோம். இந்நாட்டின்கண் மிகத்தொன்மையாக ஆட்சிபுரிந்த சேர சோழ பாண்டியரென்னும் தமிழ்ப்பெரு மூவேந்தர் முதலிய மன்னர் பெருமக்களால் தண்டமிழ் மொழியாகிய தாய்மொழியும், சைவ முதலாய சமயமும் பொன்னேபோற் போற்றப்பெற்று இன் னும் நின்று நிலவுகின்றன. இன்னும் சேரன் செங்குட்டுவன் முதலிய தமிழ்நாட்டு மன்னர் படையெடுத்துச் சென்று வடநாட்டு மன்னரை வென்று இமயமலைச் சிகரத்தில் தம் தமிழ்க் கொடியை நாட்டி ஆட்சி புரிந்தனரெனவும், கலஞ்சமைப்பித்துத் தம் நாட்டு வணிகரைப் பிற நாடுகளிற் குடியேற்றுவித்து வாணிகம் புரியுமாறு செய்து நாட்டை வளம்படுத்தினரெனவும் காணப்பெறுஞ் சான்றுகளால் நந்தண்டமிழ் மொழியும் அதனோடியைந்த சமயமும் பாரத நாட்டின்கண்ணும் பிற நாட்டின்கண்ணும் பரவிப் பாராட்டப் பெற்றிருந்தன எனவும் அறி தற்கிடமுண்டு. பண்டைத் தமிழ்நாட்டுப் பெரியார் தாய்மொழியாகிய தனித்தமிழ் மொழியுடன் மந்திர மொழியாகிய வடமொழியையும் கண்ணெனக் கருதிக் கற்று மேம்பட்டு விளங்கினர்.

இத்தகைய நாட்டின்கண் வேதாகம நெறிக்குட்பட்ட சைவ முதலாய சமயங்கள் சோபானமுறையில் வேறுபட்டனவாகக் காணப் பெறினும் உற்றுநோக்கின் அவற்றுள் ஒன்று மற்றொன்றிற்கு அங்க மாக முடிவில் அவையனைத்தும் ஒன்றாக முடிவுபெறும். தூய்மை யான வுணவுவுண்டுச் சிவபெருமானை வழிபடுவோரனைவரும் பொது வகையில் சைவர் என அழைக்கப் பெறினும் வேதம், ஆகமம் என்னு

மிரண்டையுந் தழுவி தீக்ஷா சமஸ்காரத்தால் சதாசார முடையராய் நிரஞ்சன சூனிய நிட்களமாய் விளங்கும் சிவலிங்கப் பெருமானைத் தூலம், சூக்குமம், காரணம் என்னும் முத்தனுவின்கண் இஷ்ட லிங்கம், பிராணலிங்கம், பாவனுலிங்கமாகக் குருமூர்த்தியினால் தரித் தருளப்பெற்று அப்பெருமானையன்றி வேறு தெய்வம் உண்டெனக் கனவிலுங் கருதாதவராகித் தாம் உட்கொள்ளும் ஒவ்வொரு பொரு ளின் உருவம், சுவை, நிறைவு என்னும் மூன்றையும் முறையே மூவகை இலிங்கங்கட்கும் அர்ப்பித்து எச்செயலிலும் தான் என்னும் முனைப்பற்றுச் சிவசம்பந்தமில்லாத யாரிடத்தும் எதையும் விரும்பாத வீரதியராக விளங்கும் சிவஞானச் செல்வரே சிறப்பு வகையில் வீர சைவரென அழைக்கப் பெறுகின்றனர். வீ—சிவஞானம், ர—ரமித்தல் எனவே சிவஞானத்தில் திளைக்குஞ்சைவர் என்பது திரண்டபொருள்.

இத்தகைய சிறப்புவாய்ந்த வீரசைவர் தம்மிடத்து இடை யீடின்றி விளங்கும் இஷ்டலிங்கப் பெருமானையும், அச்சிவசம்பந்த முடைய சங்கம மூர்த்தியையுமன்றி வேறொன்றை வணங்குதற்கும், வேறு நிவேதனப் பொருளை உண்ணுதற்கும் உரியரல்லர். எனினும் பரார்த்தமாகிய ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் சிவலிங்கப் பெரு மானுக்குரிய நித்திய நைமித்திகங்கட்கு இடையூறு நேருமாயின் உடனே அதனைத் தீர்த்தற்கும் இயலாதாயின் உயிரை விடுதற்கும் உரியரென வாதுளாகமம் கூறுதலின் ஆலயங்களில் நித்திய நைமித் திகங்களை நடத்தி மகிழ்வித்து இன்புறுதற்குரிய தலைமையை வகித் தற்கும் உரியராவர். வீரசைவரே கடவுள் வழிபாட்டிற்கும் அவரது அருளைப் பெறுதற்கும் பிறரை நாடாது தாமாகவே நேர்முகமாகப் பெறுதற்குரியர். இவரே இயன்றதைக்கொண்டு என்றும் இறைவற் கருச்சித்து இணையற்ற இன்பத்தை நுகர்தற்குரிய பாக்கியத்தை யுடையர்.

வீரசைவ சமயத்தை வேதாகம காலந்தொட்டே ஸ்ரீசதாசிவ மூர்த்தியின் ஐந்து முகங்களினின்றுந் தோன்றிய ஸ்ரீஇரேணுக சிவா சாரியராதிய பஞ்சாசாரியர்களும், அவரதுமாணக்கராகிய அகத்தியராதிய முனிபுங்கவர்களும் அவர் வகுத்த நெறிக்கணின்ற சோழர் முதலிய மன்னர் மன்னரும் நாடெங்கும் பரவச்செய்து மக்களை நல்வழிப்படுத்

தினர். வட நாட்டின்கண் கேதாரம், காசி, உஜ்ஜயினி, ஸ்ரீசைலம், அரம்பாபுரி, சித்திரகல்துருகம் முதலிய சிறந்த புண்ணிய நகரங்களில் வீரசைவ சமயாசாரிய பீடங்கள் இற்றைக்குந் தலைசிறந்து நிற்பனபோல இத்தமிழ் நாட்டின்கண்ணும் புண்ணிய நகரமாகிய சிதம்பரம், விருத்தாசலம், திருவண்ணாமலை, கும்பகோணம், காஞ்சீபுரம், மதுரை, திருவாரூர் முதலிய இடங்களில் வீரசைவ சமயாசாரியர் மடங்கள் விளங்கியிருந்தன. கன்னடமுந் தமிழும் கலந்து பயிலாத காரணத்தானும், பிறவற்றானும் வடநாட்டாருக்கும் தமிழ் நாட்டாருக்கும் போக்குவரவு தடைப்படவே பஞ்சாசாரியர் முதலிய மடாதிபதிகள் தமிழ் நாட்டிற்கு எழுந்தருளுதலும், தமிழ் நாட்டார் ஆசாரிய பீடங்களின் பெருமையை யுணர்ந்து வழிபட்டுச் சீர்பெறுதலும் தடையுற்றன.

கும்பகோணம் வீரசிங்காதனபீடம் ஸ்ரீ சாரங்கதேவர் மடாலயம் மிகப் பழமையானது. இம்மடாலயம் மகாமகத் தீர்த்தக்கரையிலுள்ளது. இதன் சார்பான வீரபத்திர சுவாமியின் புராதன ஆலயமும் அத்தீர்த்தக் கரையிலுள்ளது. இந்த மடாதிபதியாகிய ஸ்ரீசாரங்கதேவருடைய ஆளுகையிலேயே கும்பேசுவர சுவாமியாலயமும் சிலவாண்டுகட்கு முன்வரையும் பரிபாலிக்கப் பெற்றுவந்ததென்பதற்கு அங்குள்ள சில அடையாளங்களும், வழக்குகளும் சான்றுகின்றன. ஸ்ரீசாரங்கதேவர் பல நூற்றாண்டுகட்கு முன்னரே இந்நாட்டிலுள்ள பல்லாயிரம் பக்தர்கட்டு இலிங்க தாரணதீக்ஷைசெய்து ஒவ்வொரு பகுதியிலும் சமயாசாரங்களைப் போதிப்பதற்குத் தமது பக்தர்களிற் சிலரையே உடையவர்களென நியமித்துச் சமய பரிபாலனஞ் செய்து வந்தனர். இடைக்காலத்தில்வந்த பீடாதிபதிகள் வெளியில் புறப்பாடு செய்யாமையால் ஆசாரியர்கட்கும் பக்தர்கட்கும் தொடர்பு அறவே, உடையவர்களும் தாமே எல்லாம் உடையவராகக் கருத பக்தர்களிற் பலரும் சமயப்பற்றைக் கைவிடுத்தனர். சில ஆண்டுகளாக இம்மடாலயத்தில் தலைவருமில்லாமற்போக மடாலயத்தின் கட்டடமும் வழக்காடு நிலைமையில் வந்துவிட்டது. இதன் முற்காலப் பெருமையினையும் தற்காலச் சிறுமையினையும் நோக்க இத்தமிழ் நாட்டில் வீரசைவ அபிமானிகளும் மடாதிபதிகளும் இல்லையென்றே கூறினுந் தவறன்று. சிதம்பரத்தில் நடராஜப் பெருமானுக்குப் பூசையின்றித் தடைப்பட்டு

நிற்கக் கேள்வியுற்று வேலூர் சென்று வீரசைவராகி அக்குறையை நீக்குவித்த கருணாமூர்த்தியாகிய துறையூர் ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் முதலிய பெரியார் அவதரித்து உலாவிவந்த நாடும் இத்தமிழ் நாடல்லவா? தமது சமயத்திற்கும் அறநிலையமாகிய மடத்திற்கும் குறைவு நேருங்கால் உண்மையில் சமயப் பற்றுடையார் உண்டுறங்கி வாழ மனமிசைவாரா! அந்தோ உலகியல் நன்று! நன்று!!

திருவண்ணாமலையின்கண் தொன்மையாகவே வீரசைவர்கள் பலர் பெருமையுடன் வாழ்ந்து வந்திருக்கின்றனர். இத்தலத்தின்கண் ஸ்ரீ குகைநமசிவாயதேவர் மடம், ஸ்ரீ ஜாளிகந்தகுருதேவர் மடம், ஸ்ரீ விரூபாக்ஷகுருதேவர் மடம், ஸ்ரீ பாணிபாத்திரகுருதேவர் மடம் என்பன புராதனமானவை. இம்மடாலயத்தின் பூருவாசாரியர்கள் நால்வரும் அண்ணாமலைநாதருடன் சமமாகக் கருதப்பெற்று வழிபடுதற்குரிய ஞானமும் தபசும் உடையவராயிருந்தனர். இதற்கு இற்றைக்குந் தலைவராயுள்ள சுவாமிகள் பல்லக்கிலிவர்ந்து பஞ்சமூர்த்திகளுடன் திருமலையைச் சுற்றித் திருவுலா வரும்வழக்கம் இருந்துவருதல் சான்றாகின்றது; எனினும் இந்த நூற்றாண்டில் தலைவராயமர்வோர் தமது நிலைக்கேற்ற கடமைகளைச் செய்யாது விடுத்தமையாற்றானே அங்கு வீரசைவத்தின் உண்மையும் மடாலயத்தின் பெருமையும் தோன்றாது மறைபடலாயின.

விருத்தாசலம் புராதனமான நகரம். இந்நகரத்தில் ஒவ்வொரு சாதியாரும் மடங்கட்டுவித்து அவற்றில் வீரசைவர்களையே பூஜ்யகராக இருக்கச் செய்தமையால் 60-க்கு மேற்பட்ட மடங்கள் இருந்தனவாகத் தெரியவருகின்றது. அவற்றுள் இப்பொழுதும் இரண்டொன்று காணப்படுகின்றன. இந்நகரத்தில்தான் சகசநிட்டை முதலிய வீரசைவ நூல்களைச் செய்தருளிய தபோநிதியாகிய ஸ்ரீ குமாரதேவராலயமும் விளங்குகின்றது. இப்பெரியாரது ஒடுக்கத்தானமாகிய இவ்வாலயமட்டிலும் நித்திய நைமித்திகக் குறைவின்றிக் கண்டு தரிசிப்பாரை அன்புருவாக்கும் அருணிலையாக மிளிர்கின்றது. இங்குச் சில ஏட்டுச் சுவடிகளு மிருக்கின்றன. துறையூர் பெரிய மடத்தின் தலைவராகிய ஸ்ரீமத் சுவாமிகள் இங்கெழுந்தருளியிருந்து இதனைச் செவ்வனே பரிபாலித்து வருகின்றார்கள்.

சிதம்பரத்தில் ஸ்ரீ பச்சகந்ததேவ சுவாமிகள் பரம்பரையாக எழுந்தருளியிருந்து சமய பாலனஞ் செய்து வந்துள்ளார்களெனத் தெரியவருகின்றது. இந்த சுவாமிகளுடைய மரபினர்தான் பஞ்சா சாரியர்களிடம் சூத்திரம் பெற்று மிகப்பழமையான காலத்திலேயே தமிழ் நாட்டிற்குவந்து சமய பரிபாலனஞ் செய்தவர்களெனத் தெரிய வருகின்றது. இம்மரபினர் இந்நகரத்தில் இப்பொழுதில்லையாயினும் சில பிரிவினராகப் பிரிந்து முசிரி தாலூகா எரகுடி, சேலம் தாலூகா பேரூர் முதலிய இடங்களில் மடாதிபதிகளா யிருந்துவருகின்றனர். இவர்கட்குப் பலரும் சீடராயிருக்கின்றனர். இங்கு வியாக்கிரம பாத ரின் புதல்வராகிய உபமன்னிய முனிவருக்குத் திருப்பாற் கடலையே அழைத்துண்பித்தார் நடராஜப் பெருமான் என்பது தலமான்மியத் துள் ஒன்று. தசதீர்த்தத்துள் ஒன்றாகிய திருப்பாற்கடல் என்பது திருக்கோயிலின் வடக்குத் தெருவிலிருக்கின்றது. இத்தீர்த்தத்தைத் தன்னகத்துக் கொண்டுள்ள மடாலயம் இற்றைக்குந் திருப்பாற்கடல் மடமென வழங்குகின்றது. இங்குத்தான் ஸ்ரீமாணிக்கவாசக சுவாமி கள் திருவாசகஞ் சொல்ல நடராஜப் பெருமானே அடியாராக வந்து எழுதிக்கொண்டது என்பர். 'இதற்குச் சான்றாகவும் திருப்பெருந் துறைபோல ஆத்மநாதராலயமும், யோகாம்பிகையாலயமும் அரூப மூர்த்தி வடிவாய் அமைந்துள்ளன. அண்ணாமலை ஸ்ரீகுகைநமசிவாய தேவரின் மாணாக்கராகிய குருநமசிவாயதேவர் தங்கியிருப்ப நடராஜப் பெருமான் கட்டளையால் தில்லை மூவாயிரவரால் பல்லக்கில் அழைக்கப் பெற்றதும் இம்மடாலயத்தில்தான் என்பர். இங்கு அக்குருநமசிவாய மூர்த்தியின் சமாதிநிலையமும் இருக்கின்றது. இந்த மடாலயத்தின் தலைவரும் பல்லக்கில் இவர்ந்து நடராஜப்பெருமான் சந்நிதானத்துக்கு எழுந்தருளும் வழக்கமுமுண்டு. இம்மடாலயத்திலிருந்து இன்றைக் கும் படித்தரம் பெரியகோயிலுக்குக் கொடுக்கப்பெறுகின்றது. அதற் காகக் கவர்ன்மெண்டாரும் பொருளுதவிவருகின்றனர். இங்கிருந் தெழுதப்பெற்று இறைவனால் கைச்சாத்திடப்பெற்ற "திருவாசகம்" சிவகங்கையில் வீரசைவப் பெரியாராகிய ஸ்ரீ அம்பலத்தாடுவார்பால் சேர்ந்தது என்றும், அதனையே பெட்டகத்தில் வைத்துத் திறவாமல் இன்றும் அம்மடாதிபதியால் பூசிக்கப் பெறுகின்றது என்றும் கூறு கின்றனர். திருப்பெருந்துறை ஆத்மநாதராலயமும் சில ஆண்டுகட்கு முன்வரை அம்பலத்தாடுவாரது ஆட்சியிலிருந்தது என்பர். குரு

நமசிவாய மூர்த்தியின் பெருமையையுணர்ந்து இம்மடாலயத்தைத் தெரிசிக்கப்புகும் அபிமானிகளில் யாரும் மனமுருகாமலிரார்.

திருப்பாதிரிப்புலியூர் என்பது திருநாவுக்கரையரைக் கடலினின்றுங் கல்லைத் தெப்பமாகக்கொண்டு கரையேறவிட்ட முதல்வர் திருக்கோயில்கொண் டெழுந்தருளியிருக்கும் புண்ணிய நகர். இங்குத் திருக்கோவலூர் ஆதீனம் ஞானியார் மடாலயம் என்னும் வீரசைவமடம் நன்னிலைமையில் இருக்கின்றது. இந்நகரையடுத்த வயலகத்தே விளங்கும் இரண்டாவது பட்டத்துச் சுவாமிகளுடைய சமாதி நிலையமும், அதன்கண் எழுந்தருளியிருக்கும் மூர்த்தியின் திருவுருவமும் வீரசைவசமய விசாரஞ்செய்து சரியான சமாதியிலிருக்க விரும்பும் பக்குவிகட்கு ஏற்றவாறு அருளும் அமைதியும் அருளுமுடையனவாக விளங்குகின்றன. இங்கு நிகழ்காலத்தில் தலைவராக அமர்ந்தருளும் ஸ்ரீமத் சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகளுடைய சொற்பெருக்கினமுதுறழ் இன்சுவையையுண்டு மகிழாதார் யாருமிலர்.

பொம்மயபாளயம் ஸ்ரீமத் சிவஞானபாலைய சுவாமிகள் மடாலயத்தின் பெருமையினையும். இதனதீனத்தில் இருக்கும் மைலம் ஸ்ரீசுப்பிரமணிய சுவாமி தேவாலயத்தின் மகிமையினையும் சந்தானேயரும் பிறரும் அறியாமலிரார். இங்கு இப்பொழுது பட்டத்தமர்ந்திருக்கும் 18-வது பட்டத்து ஸ்ரீசிவஞானபாலைய சுவாமிகள் போதிய கல்வியும் சமயாபிமானமும் உடையவர்களாய் இப்பத்திரிகைக்குப் பொருளுதவி செய்துவருவதுடன் இவ்வாண்டில் மடாலயத்தின்கண் வீரசைவ மாகேச மாணவரின் முன்னேற்றத்தைக் கருதி உண்டியும் உடையும் கொடுத்து வடமொழி தென்மொழியுடன் ஆங்கிலமும் கற்பித்தற்குரிய வீரசைவ பாடசாலையொன்று நிறுவுவதாகிய பேரறத்தை செய்யத் திருவுள்ளங் கொண்டுள்ளார்கள். இப்பேரறம் நிலைபெறுமாறு திருவருள் முன்னின்றாக்குக.

இதுவரை ஆராய்ந்தவற்றால் இத்தமிழ்நாட்டின்கண் வீரசைவ சமயமும் மடாலயங்களும் சீர்பெற விளங்கிவந்தன வெனவும், இக்காலத்திலோ இரண்டொன்றைத் தவிர ஏனையவை நிலைமாறி வருந்தற்கிடமாக இருக்கின்றன எனவும் அறிகின்றோம்.

வீரசைவ சமய வளர்ச்சியைக் கருதி பண்டைக் காலத்தில் ஸ்ரீபஞ்சாசாரிய குருவர்க்கத மடமெனவும், பட்டாதிகார மடமெனவும், விரக்தியாச்சிரம மடமெனவும் பாகுபடுத்தியும், அவை யொன்றுக் கொன்று அங்கமாக நிற்க அவற்றிற்குரிய கடமையும் பொறுப்பும் வெவ்வேறெ முறைப்படுத்தியும் பூர்வாசாரியர்கள் பிரசாரஞ் செய்து வந்திருக்கின்றார்கள். வீரசைவர்களுள் மாகேசரெனவும், பக்தரென வும் ஒருமுறையிற் பாகுபாடும் பலமுறையில் ஒற்றுமையுமான வழக் காறுண்டு. அதற்கேற்பக் கடமையும் மரியாதையும் வகுக்கப்பட்டிருந் தன. இவ்வித முறைகள் இன்றும் வடநாட்டி லிருந்துவருகின்றன. அதனால் அங்கு சமயவொழுக்கங் குன்றாமலிருக்கின்றது. இந்நாட் டிலோ அவை வழுவினவென்றே கூறுதலு மிகையாகாது. அவை வழுவவே சமய உண்மையும் ஒழுக்கமும் மறைந்து வழுவலாயின. இவற்றிற்கெல்லாம் மடாதிபதிகள் தம் கடமையை யுணர்ந்து வெளிப் போந்து பிரசாரஞ்செய்யாமையும், சமூகத்தார் ஒற்றுமையுடன் குழுமி அவர்களைத் தரிசித்துக் கண்காணிக்காது விட்டமையுமே காரணமென் னலாம். மடாதிபதிகளிற் சிலர் தமது துறவற நிலைமையை மறந்து முனிவர் இருப்பிடமாகிய மடாலயத்தை இல்லற நிலையமாக ஆக்கிக் கொண்டனர். செல்வாக்குடைய சிலர் மடாலயத்தை யாதரிப்பதாகக் காட்டி மடாலயத்தையும் பொருளையும் தமது சொந்த அனுபவத்திற் குள்ளாக்கிக் கொண்டனர். அதனாற்றான் மடாலயத்தின் பெருமை யும் பொருள்வருவாயும் குன்றுவனவாயின. சிலரோ சிக்கனமாகப் பொருளீட்டி வைக்கின்றனர். எனினும், மடாலயத்தின் தருமமாகிய அன்னமளித்தலையும் சமயப்பிரசாரஞ் செய்தலையும் அறவே மறந்து பிற்காலத்தில் தம் இனத்தார்க்குப் பயன்படும்படிச் செய்து வீணே வாழ்கின்றனர்.

அதனால், தருமபரிபாலன நெறியில் வகுத்துவைபாத அப் பொருளைப் பிற்காலத்து அதிபராய் வருவோர் தம்மனுபவத்திற்காகக் கடவுளால் கொடுக்கப்பட்டதெனக் கருதித் தீயவழிகளிற் செலவழித் தொழிப்பர்போலும். ஆதலால் மடாதிபதிகளாய் அமர்ந்த பாக்கிய முடைய பெரியார் தமது நிலைக்கேற்ப அறிவும் ஒழுக்கமும் சமய நூலாராய்ச்சியும் உடையராய் மடாலயத்தின் சீருஞ் சிறப்பும் வருவா யும் உயரும்படிச்செய்து கல்வியபிவிர்த்தி செய்வதிலும், சமயப் பிர

சாரஞ் செய்வதிலும் பெருநோக்க முடையவரா யிருத்தல்வேண்டும். தரும பரிபாலனம் செய்தற்பொருட்டு அரசர்களாலும் அன்புடையோராலும் தொகுத்துதவப்பெற்ற பொதுப் பொருள்நிலையமாகிய மடாலயங்களில் தரும பரிபாலனஞ் செய்வதாக வாக்குறுதிசெய்து சிம்மாசனமேறிய மடாதிபதிகளாகிய பெரியார் தாம் செய்த வாக்குறுதியையும் பதவியின் கடமையையு முணராது வாளாவிருப்பரேல் கடவுளும் வெறுக்காரா! உலகமும் பழிக்காதா! இந்நாட்டில் இத்தகைய பெரியாரெல்லாம் தங்கடமையை யுணராது அறநிலையம் மறநிலையமாகச் செய்தமையாற்றானே சமயப்பற்றும் கடவுள்மாட்டன்பும் குறைவனவாயின. சமயப் பிரசாரத்திலாயினும் கல்வி வளர்ச்சியிலாயினும் உதவிசெய்யாத பெரியாரும் பெரியாராவரா? மடாலயமும் அறநிலைப் பீடமாகுமா? சிற்சிலவிடங்களில் வீரசைவ மடாலயங்களையும் மடாதிபதிகளையும் தரிசிக்கச் செல்லுங்கால் அமைதியும் அன்பும் பெருகாதொழியக் கவலையே பெருகுதற்கிடமாகின்றது. மடாதிபதிகள் சமயப் பிரசாரஞ்செய்ய முன்வரவேண்டும். சமூகத்தாரும் ஒன்றுகூடிப் பிரசாரஞ் செய்வித்தல் வேண்டும். இவ்விருவரும் கண்மூடி உறங்குவாராயின் சமயப்பற்றுடைய அன்பர் சிலராவதுகூடி சத்யாக்கிரகமிருந்து, மீண்டும் இக்காலத்தில் பசவேசராக அவதாரஞ்செய்து சமயப் பிரசாரஞ் செய்ய வேண்டுமென நந்தியெம்பெருமானையும், சென்ன பசவராக அவதாரஞ்செய்து சடுஸ்தல நிர்ணயஞ்செய்யவேண்டுமென வள்ளிகாந்தனாகிய சண்முகப்பெருமானையும் வேண்டி விரதங்கிடந்து தவம்புரிதல் வேண்டும். அன்னவரருள் கூடுவதாகுக.

உ

வேலுமயிலுந்துணை.

மாயை மதுகைநாதனைப் பூசித்தல்.

திருவாளர் உருத்திரசாமி ஐயர் அவர்கள்,
தமிழ்ப்பண்டிதர், புலிசை.

நாயகனை மணந்து இன்பம் துய்த்தல் வேண்டும் என்ற எண்ணத்துடன் மாயை குருபரனாகிய சாந்தவாங்காரன் கூறிய மொழிப்

படியே மதுகைநாதனை சிவாகம முறையாக உதயகாலையில் பூசிக்கத் தொடங்கினாள். அங்ஙனம் பூசைசெய் நாட்களுள் ஒருநாள் :—

தூரத்திலே தோன்றும் சந்திரனைக்கண்டு அலர்கின்ற குவளை மலர்கள் வாடவும், மாயையின் முகமாகிய சந்திரனோடு சமீபித்து இருக்கும் கண்களாகிய குவளைமலர்கள் விரியவும், ஏழு குதிரைகள் பூட்டிய தேருடைய சூரியன் கீழ்த்திசைக் கடலிற்றோன்றினான். அன்னத்தினது மெல்லிய இறகுகளாற் செய்த படுக்கையின் மேல் கமியளாய் மயில்போல் உறங்கிய மாயை எழுந்தாள். கைபோகிய சித்திரவேலை அமைந்த மஞ்சனச் சாலையுட் புகுந்தாள். பணிப்பெண்கள் வாசநீர் ஏந்தி பணிமாற நீராடினாள். பெண்களுள் ஒருத்தி ஈரம் புலர்த்தி இரத்தினக் கோவைகள் இணைத்த வரம்பையுடைய வஸ்திரத்தை மாயைக்குத் தரித்து ஓர் முன்தானையை முலைமேல் அணிந்தாள். தருக்கநூற் புலவர் கடம் படம் என்று இரண்டினையும் ஒருங்கு சேர விவகரிப்பது, இதனைக் கண்டநாள் தொடங்கியோ என்று சந்தேகிக்க முலைமேல் கலை விளங்கியது. பின் மஞ்சனச் சாலையினின்றும் போந்து ஆபரணம் அணிந்திடும் மண்டபத்துள் ஓர் ஆசனத்துள் அமர்ந்தாள்.

மன்மதனுடைய கரும்புவில் வளைந்திடுமாறு பூட்டப்பட்ட வண்டின் வரிசையாகிய நாணினை ஒருபக்கம் அவிழ்த்துத் தொங்க விட்டாற்போல் மேகத்தினும் மிகக்கருமை வாய்ந்த கூந்தலை வாரிச் சடையாகப் பின்னி மாயையின் முதுகுற விடுத்தாள் ஒருசேடி. சடையாகிய கருநாகம் தான்முன்விழுங்கிய சந்திர சூரியர்களை உமிழ்ந்ததோ என்னும்படி மாயையின் நெற்றியின்மேல் சந்திரப்பிரபை, சூரியப் பிரபைகளைக் கட்டினாள் ஒருத்தி. நெற்றியில் இருக்கும் சந்தனப் பொட்டாகிய வெண் மதியைப் பிடிக்க எண்ணிக் கூந்தலாகிய கருமணவின்மேல் ஊர்ந்து செல்லும் பாம்புபோல் சோதிநிறைந்த மணிகள் இழைத்த சுட்டியினை மாயையின் மயிர்வகிரிற் பொருந்த அணிந்தாள் ஒரு பேதை. விஷமூட்டிய மன்மதனது வேல்போன்ற மைதீட்டிய கண்கள், தம்முடன் சண்டையிட வருதலைக்கண்ட காதுகள் கண்களின் பகைவனாகிய நீலோற்பலத்தைத் தமக்குத் துணையாக வைத்திருத்தலை ஒக்கத் தேனொழுகும் குவளைமலர்களைக் காதின்மேல் அணிந்

தாள் ஒரு பாவை. "முனிவர்பாற் சென்று அவர் அருந்தவம் அழி யுங்கள்" என்று மதனவேள் தமக்கிட்ட கட்டளை தங்கிய ஓலையைக் காட்டித் தம்மேற் பழி சாராமல் காத்துக்கொள்ள கண்கள் அவ் வோலையை வைத்திருத்தல்போல் ஒருத்தி மாயையின் காதிற் பொன் னோலைச் சுருளையிட்டாள். தன்னை நிந்திக்கும் வெண்பற்களின்மேற் பழிபொருந்துமாறு அவை வாழும் வீட்டின் வாயிலின்முன் இறந்திடு வேன் என்று தூக்கிட்டுக் கொள்வதுபோல் வெள்ளிய முத்தினுற் செய்த மூக்கணியை ஒருத்தி யணிந்தாள். கற்றையாகவுள்ள கூந்தல் பாரத்தாலும் அதில் புனைந்துள்ள மலர்த்தொடையின் பாரத்தாலும் கழுத்து வருந்துமே என்று பிரகாசிக்கின்ற பூணொன்று பிடித்தது போல் பொன்னினுல் தகட்டு வடிவமாகச் செய்யப்பட்ட ஆபா ணத்தை ஒருத்தி கழுத்தில் அணிந்தாள். கன்னியின் மலர்போன்ற மெல்லிய கையானது இரத்தினக் கற்கள் நிறைந்த வலிய கடகத்தில் பொருந்தியது அற்புதம் எனவும் கன்னிராசிக்குரிய அஸ்த நட்சத் திரம் கற்கடக ராசியில் பொருந்துவது அற்புதம் எனவும் தோன்ற மாயைமாது அணிந்திருந்த சங்கவளையல்களைக் காக்குமாறு பொற் கடகத்தை ஒரு பூவை யணிந்தாள். மாயையினது அதரத்தின் செம் மையைத் தனியாகச் சென்று காண்பதற்குக் கூசின பவளம் இனிய சுவையுள்ள பண்டங்களை உண்பிக்கச் செல்லும் கையுடன் போவோம் என்று கூடியிருத்தல்போல் பவளக் கோவையை மாயையின் கையில் கடகத்தின்முன் ஒருத்தி புனைந்தாள். ஸ்தனத்தின்மேல் பூசிய கல வைச் சாந்தாகிய சேற்றில் புண்ணியஞ் செய்யும் புருஷர்களது மனம் எளிதில் நடந்து செல்வதைக் குறித்து இடப்பட்ட கற்களைப்போல் ஒருபெண் இரத்தின மணிகளால் ஆகிய கோவையை மாயையின் தனத் தின்மேல் அணிந்தாள். நீர்சூழ்ந்த இந்நிலவுலகத்தைத் தன் தோளிற் றங்கும் அரசனுகிய ஆதிசேடன் அல்குலாகிய சக்கிரவர்த்திக்குத் தனது ஆயிரம் முடிகளால் வணங்கி ரத்தின மணிகளைத் திறை இட் டாற்போல் இரத்தினம் இழைத்த மேகலாபரணத்தை மாயையின் அல்குல்மேற் சார்த்தினுள் ஒரு மடந்தை. உரல்போன்று பருத்த அடியிணையுடைய களிப்பு அமைந்த யானையினது வரவை அறிந்து பக்கத்தில் செல்பவர் ஒதுங்கி நடப்பதற்கு இருமருங்கினும் மணிகள் தொங்க விடுதல்போல் மாயையின் வரவினைக்கண்டு தவத்தினர் ஒட் டெடுப்ப அவளது பாதத்தில் சென்சிலம்பினைத் தரித்தாள் ஒரு பாவை.

வண்டுகள் பூங்கூடையில் உள்ள நறுமலர்களை வாசனையினால் அறிந்து குறுகுதல்போல் காளையர்கள் கண் படுவதற்காக அரும் பொருள் அனையவளாகிய மாயையின் தனத்தின்மேல் சந்தனக் குழம்பைப் பூசினாள் ஒருத்தி. உன்றன் பிம்பமே உனக்கு நிகரன்றி வேறில்லை என்று கண்டுகொள்ள கண்ணாடியை ஒருத்தி காட்டினாள். இன்னணம் அலங்கரிக்கப் பெற்ற மாயை வேள் வளைக்காத கரும்பு எனத் தோன்றினாள். அம்மன்மதன் வில்லிற் படாத மலர் எனப் பொலிந்தாள். களங்கம் இல்லாத மதி என விளங்கினாள். மேகத்தில் தோன்றாத மின் என மிளிர்ந்தாள். கடலில் தோன்றாத அமுதம் என அழகு வாய்ந்தனள். வேரில்லாத பூங்கொடி யெனப் பொலிந்தனள். அணி அணியும் பணி முடிந்ததும் "அருச்சனைக்கு வேண்டிய பொருள்கள் யாவும் சித்தமாயின" என்று ஒரு மடமாது புகல, கோமகளாகிய மாயை மயில் எழுந்தது என எழுந்தாள். அண்மி இருந்தவர் அனைவரும் குயில் எழுந்தனவென அவளை வாழ்த்தி எழுந்தார். விழித்து எழுந்தனவென பாதச் சிலம்புகள் ஒலித்தன. விண்ணில் வெயில் எழுந்தனவென இரத்தினாபரணங்கள் விளக்கம் உற்றன. அங்கு ஆட்கள் கொணர்ந்த சிவிகையின்கண் மாயை அமர்ந்தாள். சின்னங்கள், தண்ணுமை, சங்கு, திமிலை முதலிய இயங்கள் கடல்போல் முழங்கின. கண்ணன் வாய்க்குழல் பசுக்களை ஒருங்கு திரட்டினது; இக்குழல் அணிகள் அணிந்த மான்களைத் திரட்டும் 'எனவும், அறுமுகமுடைய அண்ணல் உருகவும் குழல் ஊதினர். பிறர் சாலால் இயங்கும் மாயையின் இருபாலும் தம் கால்களால் இயங்கும் பெண்கள் பலர் வண்டுகளைப்போல் சூழ்ந்தனர். மன்மதன் தன் குடையை இங்கு அனுப்பினனோ எனத் தண்ணிய வெள்ளிய வட்டமான குடைகளைத் தாங்கினர் சிலர். பாக்கின் பாளைபோல் மலர்ந்து விரிந்த வெள்ளிய கவரிகளை இருபாலும் வீசினர் சிலர். காமவெந்தழல் மூட்டல்போல் ஆலவட்டங்களை அசைத்தனர் சிலர். இவள் மனதை அறிய வேள் பொய்க்கணை சொரிவபோல் பூமழை பொழிந்தனர் சிலர். அருச்சனைக்கு வேண்டுமவைகளை அன்புடன் தூக்கிச் செல்வோர் சிலர். ஆபரணப் பேழைகளைச் சுமந்து சென்றனர் சிலர். வஸ்திரப் பெட்டிகளைத் தாங்கி நடந்தனர் சிலர். நறுமலர் மாலைகளை மகிழ்வுடன் எடுத்துப் போயினர் சிலர். சந்தனம் தாம்பூலம் குங்குமம் கஸ்தூரி முதலியவைகளை ஏந்திச் சென்றனர் சிலர். இவ்வண்ணம் இவர்கள் செல்கின்ற

மங்கலம் பொலிகின்ற மாளிகை நிறைந்த வீதியானது கொங்கை யாகிய தாமரை அரும்புகள் தோன்றுதலாலும், கண்களாகிய கயல் மீன்கள் காணுதலாலும், இதழாகிய குமுதமலர் நிறைதலாலும், கொப்பூழ் ஆகிய நீர்ச்சுழி விளங்குதலாலும் ஒரு பெரிய ஆற்றினை ஒத்துப் பொலிந்தது. மடந்தையர் காலில் அணிந்த செஞ்சிலம்புக ளின் ஒலியும், கைகளில் அணிந்த வளையல்களின் ஒலியும், வேறு அங்கங்களில் அணிந்த ஆபரணங்களின் சிற்றொலியும், மாலைகளில் மொய்க்கும் வண்டுகளின் ஒலியும் ஒருமித்துக் கடலில் பல் துளிகள் பெருகுதல்போல் மிக்கு ஒலித்தன.

வெற்றியை யுடையதும், அழகியதும், அக்கினி மயமானதும் ஆன மழுவாயுதத்தை ஏந்திய அப்பரமன் தன் நெற்றிக் கண்ணை விழித்து மன்மதனைக் கொன்றது ஏன்? எனப் பெண் சேனையோடு சென்று கேட்போம் என்ற மனவலிமையோடு செல்கின்ற செயலை ஒத்து மாயை வீதியிற் சென்றாள். அழகிய செழித்த கண்களையுடைய மாயையின் மருங்கிற் சூழ்ந்துபோன பெண்களின் வனப்பைக்கண்ட ஆடவர்கள் ஆண்சிங்கத்தை யொத்த வீரம் பொருந்தியவர்களாயினும் யானையுண்ட விளாங்கனி என உள்ளீடு ஒருசிறிதும் இன்றித்திகைத்து நின்றனர். நம்பாலுள்ள அறிவை யெல்லாம் இம்மடந்தையர் நுண் ணிய இடை ஒருசிறிதும், ஒள்ளிய நுதல் ஒருசிறிதும், படையொத்த விழி ஒருசிறிதும், பவளம் அனைய வாய் ஒருசிறிதும், குடம் போன்ற தனம் ஒருசிறிதுமாகக் கொள்ளை கொண்டனவே என்று சில ஆடவர் கூறினர். மனத்துக்குத் துக்கத்தைச் செய்யும் மயக்கத்தை மாற்றும் மருந்தாகிய நீறும், அனிச்சமலர் ஒத்த பாதத்தினையுடைய பெண்க ளின் நெற்றியை அடுக்கவே உடலம் நடுங்கி வெதும்பத்தக்க மயக் கத்தை உண்டாக்குகின்றதே; ஆதலால் 'இனத்து இயல்பாம் அறிவு, என்பதை உண்மையாக அறிந்தோம் என்று புகல்வார் சில ஆடவர். முன் ஒரு காலத்து கடல் நஞ்சருந்திய துயரினை தேவர்கள் சொல் லைக் கேட்டு அவர்களைக் காத்தவனாகிய மங்கை பங்கனும் மதுகை நாயகன்பால் செல்லும் மங்கையர் விழிகள் நமக்கு நஞ்சு செய்வதை யும், தொழுது அவனொடு சொல்வோம் நாம் என்று சில ஆடவர் கூறுவர். "இக்கூட்டத்தில் செல்லும் பாவையர்களுள் மிக்க அழ குடையார் எவர்'' என்று ஒருவன் வினவ, மற்றொருவன் வாழை,

மா, பலா என்னும் முக்கனிகளுள் முதிர்ந்த சுவையுள்ள கனி எது கூறுவாய்'' என எதிர் வினவினன். இன்னணம் இவர்கள் அழகினைப் பற்றிச் சொற்போர் புரிந்தார் சில ஆடவர். கரும்பினும் மிக சுவைத்தான செங்கயலினை ஒத்த விழிகளை யுடைய பெண்களது இளங் குரும்பை போன்ற தனங்களையும், பயன்படாக் கொவ்வைக் கனியனைய வாய் இதழினையும் அவமாக இவ்வுலகர் முன்னே விரும்பி விரும்பி நெஞ்சம் புண் ஆனதே என்று தங்கள் அறியாமையைக் குறித்து வருந்தினார்கள் சில ஆடவர்கள். விஷம் விளங்கிய செழித்த கண்களையும், மணம் வீசுகின்ற குளிர்ந்த மலர்கள் அணிந்த கூந்தலினையும், துவள்கின்ற நூல்போன்ற இடையினையும், இளம்பிறைபோல் ஒளிர்கின்ற நெற்றியினையும், அசையும் பூங் கொம்புபோல் பொலிகின்ற சரீரத்தினையும் உடையவர்களாகிய இம்மடந்தையர்கள் கலசம்போன்ற தனங்களை மூடினதுபோல் தங்கள் உடம்பெல்லாம் மூடினால் நாம் உயிரோடு இருக்கலாம் என்றார் சில புருஷர்.

இவ்வாறு காளையர்கள் கருத்தழிந்து வருந்தி வாயில் வந்தவாறெலாம் பிதற்ற, கொவ்வைக் கனிபோன்ற இதழினையுடைய கோதைமாரோடு, மல்லிகை தரித்த குழலினளாகிய மாயை மதுகை நாயகன் கோயில் வாயிலின் அருகு போயினள். தண்ணளியோடு செங்கோல் நடாத்தும் மமகாரன் மகளாம் மாயை சிவிகைவிட் டிழிந்து கரங்கள் சிரங்குவியக் கோயில்புக்கு, கட்செவிக் கங்கணராகிய மதுகை நாயகன் எதிர் நண்ணினாள். பூசைக்கு வேண்டும் திரவியங்கள் அனைத்தையும் ஏவற்பெண்கள் அருகே அமைத்து விரும்பியதை எடுத்துப் பணிமாற நெற்றிக் கண்ணனாகிய இறைவன்பால் கலந்த அன்பாகிக் கசிந்து உருகும் உள்ளத்தோடு பூசைபுரியத் தொடங்கினாள்.

முதலில் பாத்தியம் அருக்கியம் ஆசமனியங்களை விதிப்படி பூசித்து அமைத்துக்கொண்டு எங்கும் வியாபகமாய் உள்ள இறைவனைத் தான் செய்யும் பூசையினை ஏற்று அநுக்கிரகிக்க அச்சிவலிங்க வடிவில் சாந்நித்தியராய் இருக்கப் பிரார்த்தித்துப் பின் அருக்கியாதிகளை மந்திர பூர்வமாகக் கொடுத்து, திருமேனியின் மீதுள்ள புஷ்பாதிகளைக் களைந்து திருமஞ்சன மாட்டத் தொடங்கினாள். தைலம், பஞ்சகவ்வியம், பஞ்சாமிர்தம், நறுநெய், பால், தயிர், தேன், கரும்புடைத்த

சாறு, பழம் பிழிந்த மதுரச் சாறு, இளநீர், சந்தனக் குழம்பு, வேதாகம விதிப்படி அமைத்துப் பூசித்த ஸ்தபனம் ஆகிய இவைகளை ஒன்றன் பின் ஒன்று முறையாக இறைவற்கு அன்புடன் அபிஷேகித்தாள். சங்கு உலவுகின்ற கையும் வேலொத்த விழியும் உடைய மாயை விபூதி உத்தூளித்து ஒளிமிளிரும் மங்கலம் நிறைந்த திருமேனி முழுதும் சந்தனத் திரளை நிரம்பச் சாத்தினாள். சந்திரன் எனும் ஒரு சிறிய வளைந்த முதுகையுடைய இப்பி ஈன்றதோ என்னும்படி கங்கை தங்கிய முடிமீதில் வெண்ணிலவு வீசும் முத்தாகிய அக்ஷதையை இட்டாள். பிறையணிப் பெம்மான் மீது கிடப்பவைகள் நாகங்களோ எனக் காண்பவர் மயங்கும்படி நீண்டு திரண்டதும், நடுவிற் பருத்து நுனியிற் சிறுத்ததும், தேன் நிறைந்ததும் ஆன பல நறுமலர் மாலைகளை இறைவன்மீது அலங்கரித்தாள். யானைத் தோலாடை போர்த்த திருமேனி அழகுபெற நுண்ணிய பட்டாடை புனைந்தாள். நாயகன் மீதுள்ள எலும்பணிகள் நாணுமாறு சுடர்மணிகள் இழைத்த ஆபரணங்கள் பலவற்றையும் எடுத்து அணிந்தாள். நித்திய கல்யாணியின் மணாளற்குக் கஸ்தூரி சாத்தினாள். பிச்சையுணவு அல்லால் வேறுணவு இல்லாத பெருந்தகைக்கு நால்வகைத்தாய அறுசுவையோடு கூடிய போனகங்கள் நிவேதித்தாள். வெற்றிலையோடு முகவாசஞ் சமர்ப்பித்தாள். தூபங் காட்டினாள். செழுஞ் சுடரைப் பிரணவாகாரமாகக் காட்டி ஆராதித்தாள். சிவிறி வீசினாள். கவரி இரட்டினாள். கண்ணாடி காட்டினாள். இறைவன் உவக்குமாறு பல இயங்கள் முழங்கின. பின்னர் கண்ணருவி பாய கரங்கள் சிரங்குவிய அமலனைக் கண்டு பலவாறாகத் துதித்தாள். காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்க வேதத்தின் மெய்ப்பொருளாகிய அஞ்செழுத்தைச் செபித்தாள். விதிமுறையாக வலம் வந்து நமஸ்காரம் பண்ணினாள். கண்கள் சொரிகின்ற நீரால் எழுதிய மை அழிந்திருப்ப, மயிர் பொடிப்ப, அரும்பும் வியர்வையால் நுதற் பொட்டழிய, மின்னொத்த சடையினையும், பொன்னொத்த மேனியையும் உடைய சிவபெருமானுடைய பரமாயதோர் ஆநந்த வெள்ளத்தில் மூழ்கிப் பரவசப்பட்டாள்.

மாயையானவள் ஆனந்த மேலீட்டினால் ஆனந்தக்கூத்து ஆடுபவளைப்போல் நடன மண்டபம் சேர்ந்தாள். நடனத்திற்கு ஏற்ப உடை உடுத்தாள். தனத்தின்மேல் கச்சு அணிந்தாள். மல்லிகை

மலர் போன்ற சதங்கைகளைக் காலில் கட்டினார்கள். கலைமகளும் வெட்கிச் சரீரம் விளர்ப்பப் பல மாதர் வீணை வைத்துக்கொண்டு பாட்டுப் பாடினார்கள். வாய்உரைக்கும் சொற்கள்போல் மத்தளம் செவ்விய கைகளால் நன்றாகப் பேசின. மாயையின் தனத்திற்குச் சமமாக இருக்கும் என் முன்னே நீயும் இணையென வந்தனையோ என்று வலக்கையிலுள்ள குவிந்த வடிவாக வெண்கலத்தால் செய்யப் பட்ட தாளமானது, இரும்பினால் தகட்டு வடிவமாகச் செய்யப்பட்ட இடக்கைத் தாளத்தைத் தாக்குதல்போல் அடித்து ஒலித்தது. என் னொரு கையோடு மல்லயுத்தம் பண்ண வருக என நிற்பவளைப்போல் இடையில் ஓர் கையினைப் பொருந்த வைத்து, ஒரு கையை நீட்டி, கரும்பு வில்லினனாகிய மன்மதனை உதவிக்கு அழைப்பதுபோல் காற் சதங்கைகள் ஒலிக்க, பொன்னினால் இயன்ற ஓர் பாவை நடிக்கின்ற தென மாயைவல்லி நடம்புரியலுற்றாள். அழகிய மலர்போன்ற கால் அடைவு, (சதி) மத்தளம் இசைக்கின்ற தாளவரிசைகளோடு பொருந்த, இரண்டு கண்களும் கைகள் செல்கின்ற வழிகளில் நடந்து செல்ல, வாய் உரைக்கின்ற சொற்களின் பொருள்களை மலர்க்கரம் விளக்க, பேயோடு நடித்த இறைவனும் இவள் நடனத்தைக் கண்டு பித்தடைய, ஆகாயத்தில் சஞ்சரிக்கும் பறவைகளின் குரல் ஒலிகள் உண்டாகும் படி செம்பஞ்சு தீட்டி ஒளிபரந்த பதத்தினால் மிதித்து நடித்தாள் அம்மாயை. மனமோடு தொழிற்படும் இரண்டு கட்புலன்களையன்றி மற்றைய புலன்கள் செயல் ஒழிந்தன.

இவள் செய்கின்ற நடனத்தின் வனப்பைக் கண்ட நான்முகன் தன் துணைவியாகிய நாமகளை உமிழ்ந்தான்; சக்கரபாணியாகிய நாரணனும் தன் மார்பில் வசிக்கின்ற சீதேவியை சீயென வெறுத் தான். தேவேந்திரனும் தன் பட்ட மகிஷியாகிய இந்திராணியை எண்ணாதவனாகி மறந்தான். தேவர்கள் செய்கை ஈது என்றால் மனி தர்கள் செய்கை சொல்லும் தரத்ததோ. சிலர் பொன்மதிலில் உள்ள சாளரத் துளையில் தம் முகத்தை வைத்துப் பார்த்து அயர்ந்து இருந் தனர். சிலர் அவர்கள் தோளிலேறி மின்னலென நடம்புரியும் மாயை யின் இடையாகிய ஆகாயத்தைக் காண இடர்ப்படுவார். சில ஆடவர் பொன்மதின்மேல் இயற்றப்பட்ட சுதை உருவங்களோ என்று எண் ணும்படி அசைவறநின்று இவள்செய்யும் நடனத்தைப்பார்த்திருந்தார்.

மாயை இவ்வண்ணம் நடிக்கக் காளகண்டனாகிய மதுகை நாயகனை முப்போதும் அருச்சிக்கும் அருச்சகன் ஒருவன் உவந்து இறைவன் அணிந்த சந்தனத்தையும் மாலைகளையும் பிரசாதமாக இவட்கு அளித்தான். மாயையும் மதுகேசன் நிருமாலியத்தை வணங்கியேற்றுப் பெண்களோடு அரங்கில் இருந்தாள். அவளும் நூல் போன்ற இடையானது மிகவும் வலிக்குமே என வருந்திய காற் சதங்கைகள் அழுதபிள்ளை ஓய்வதுபோல் சத்தம் அடங்கின. நித்த னாய் எங்கும் நிறைந்தவனாய், மலமுத்தனாய் உள்ள, அருணிறைந்த அல்லமப்பெயரை யுடையவன் மாயை அன்பொடியற்றும் பூசையினை யறிந்து அருள்செய நினைந்தான்.

ஸ்ரீ பசவேச விஜயம்.

திருவாளர் G. C. வீரப்பா, B. A., L. L. B., டெங்கணிக்கோட்டை.

இல்லறம் நடாத்தல்.

அறம், தருமம், கடமைஎன்பன ஒருபொருள் குறித்தவை. இல்லத்தை (வீட்டை) த்துறந்து பொய்யாமை, வெகுளாமை, கொல் லாமை, வெஃகாமை, அருளுடைமைமுதலிய அறங்களைக் காத்தலையே விரதமாகக் கொண்டுள்ள துறவறத்தார் போல, இல்லத்தின்கண் முறைப்படி மணந்த வாழ்க்கைத் துணையாகிய மனையாளுடனிருந்து அறவோர்க் களித்தல், அந்தண ரோம்பல், துறவோர்க்கு எதிர்தல், விருந்தினரைப் புரந்தருதல் முதலிய சிறந்த பரோபகாரங்களைச் செய் தலே இல்லறம் நடாத்தல் எனப்பெறும். துறவறத்தார் தம்பசி முத லியவற்றை அடக்கும் ஆற்றலுடையார். இல்லறத்தாரோ உணவு முதலியவற்றைக் கொடுத்துத் தம் பசியை மாற்றுதலேயன்றிப் பிறர் பசி முதலியவற்றையும் மாற்றுவிக்கும் போராற்றலுடையராவர். இல் லறத்தாரே மற்றெவ்வகை அறத்தார்க்கும் துணையாயிருந்து உதவி புரிவர். இத்தகைய இல்லறத்தை நடாத்துங் காட்சியைக் காண வேண்டிப் பலதேவர் முதலிய பெரியார் அதற்காவன அமைத்துக்

கொடுத்து நம் பசவேசரையும் கங்காம்பையாரையும் நன்னாளில் இல் லறைப் படுத்தினார்கள். அவர்களது இல்லற வாழ்க்கையைக் கண்டு கல்யாண புரியிலுள்ளார் அனைவரும் பெருமகிழ்ச்சியுற்றிருந்தனர். இவ் விருவரது தோற்றத்தையும் செயலையுங் கண்ட நுண்ணறிவுடையார் அறக்கடவுளே இங்ஙனம் இரண்டுருவெடுத்து இல்லறத்தை நடாத் திக் காட்டுகின்றதென அகமிகமகிழ்வார்.

இவ்வாறு பலரும் மகிழ்ச்சியுற்றிருக்க, இம்மகிழ்ச்சிக்குக் கார ணராயிருந்த பசவேசரது முகத்தில் மாத்திரம் கவலைக்குறி தோன் றுவதாயிற்று. அதனைப் பிறர் அறிந்தாரல்லர். சற்புடன் நுண்ணறி வுவாய்ந்த அமைச்சர் புதல்வியாராகிய கங்காம்பையார் தங்கணவ ரது கவலைக்குறியை அறியலாயினர். கங்காம்பையார் தங்கணவராகிய பசவேசர் தனிமையிலிருக்கும்பொழுது அவரது பாதத்தை முதல் முறையாக வணங்கிநின்று, என்பாக்கியமே! உம்மை ஏதோ ஓர்கவலை துன்புறுத்துவதாகக் காணப்படுகின்றதே. அதனை அடியாளுக்கு உணர்த்தலாகாதா? அக்கவலைக்குப் பாவியாகிய யானே காரணமா யிருக்கின்றேனோ? அப்படி யிருப்பின் (திரும்பி நின்று) இவ்வுத்த மோத்தமரைப் படைத்த கடவுள் கவலைக்கு இடமான என்னையும் படைத்து இவர்பால் இணங்குறச் செய்யலாமோ? அந்தோ இவரது நல்வினையுடன் தீவினையும் உடனிருந்தவாறென்னே! கடவுள் செய லும் இவ்வாறிருக்குமோ! யானறியேனே! எனப் பலவாறு இரக்க மொழிகூறி வருந்திநின்று, இப்படி வருந்தி நிற்றலும் தங்கணவர்க்கு மீட்டும் துன்பத்தை விளைக்குமே என அச்சங்கொண்டு திடீரென அதனை மாற்றிக்கொண்டு எதிர்நோக்கி நின்று என் தவப்பயனே! உங்கள் முகக்குறியால் வெளிப்படும் கவலைக்குக் காரணம் யானோ வேறெதுவோ மொழிந்தருள வேண்டுமென்றனர். இந்த இரக்க மொழியைக்கேட்ட பசவேசர், 'கூர்ந்த மதியுடைய நங்காய்! நீ ஏன் இப்படி வருந்துகின்றனை? உன் கவலையை இப்பொழுதே விடுக! வினையால் நேர்ந்த கவலைக்கு நீ எப்படிக் காரணமாவாய்? இவ்வுலகில் கிடைத்தற்கரிய மானிடப் பிறவியைப் பெற்ற யான் எனது எண் ணத்தை நிறைவேற்ற முடியுமோ முடியாதோ? அதற்கு என்னென்ன இடையூறுகள் உண்டாகுமோ என்னுங் கவலையேயொழிய வேறில்லை என்றனர்.

கங்காம்பையார், அன்பின் நிலையமே! என்னை மணந்து கொண்டதால் உங்கள் எண்ணத்திற்கு இடையூறு உண்டாகலா மெனச் சிந்திக்கலாம். அப்படி அடியேனால் யாதொரு இடையூறும் உண்டாகாது. உங்கட்கு எது விருப்பமோ அதுவே எனக்கும் விருப்பத்தைத் தருவது. எது உங்களால் வெறுக்கப்படுவதோ அது என்னால் கனவிலுங் கருதாது ஒழிக்கப்படுவதாம். யான் முன்னர் அமைச்சரது புதல்வியானாலும் பெற்றோரால் ஒப்புவிக்கப்பட்ட பின்னர் உங்களுடைய உடைமைப் பொருளாகிய வாழ்க்கைத் துணையல்லவா? நீங்கள் எதை எண்ணுகின்றீர்களோ அதனைக் குறிப்பாலறிந்து செய்து முடிப்பதுதானே எனது கடமை. நீங்கள் எவ்விடத்திற்குச் செல்லினும் நிழல்போல் உடன்சென்று கருதியதை முடிப்பதுதானே என்போல்வாரது பணி. என்னைப்போன்ற பெண்களுக்குக் கணவரையன்றி வழிபடு கடவுளும் வேறுண்டோ? அல்லது வேறு கதிதானும் உண்டோ? இங்ஙனமிருப்ப, என்னால் உங்கள் எண்ணத்திற்கு இடையூறு உண்டாமெனக் கவலையுறுவீர்களாயின் அதுவும் எனது தீவினையின் பயனேயன்றி வேறின்றே, என்று பணிவுடன் வேண்டிக்கொண்டனர்.

அதனைக் கேட்ட பசவேசர் பெருமகிழ்ச்சிகொண்டு, மாதே! இனிக்கவலை கொள்ளேன். நீ இப்பொழுது கூறியவற்றுள் முழு நம்பிக்கை வைக்கின்றேன். ஆனால் யான் இப்பொழுது கூறுவதை எப்பொழுதும் மறவாது சிந்தையில் வைப்பாய் எனத் துணிகின்றேன். இந்தச் சம்சார பந்தமோ அகப்பட்டாரை அடித்துக் கவிழ்க்கும் பெருங்காற்றை ஒத்தது. செல்வமோ ஆறிடுமேடு மடுவும்போலாவது. சுற்றமோ இடையிற் கூடிக்கழியும் சந்தைக் கூட்டத்தை ஒத்தது. அன்றியும் இவ்வுடம்போ நீரில் எழுதிய எழுத்தை ஒத்தது. இளமையோ அந்நீரிற்றோன்றும் குமிழியை ஒத்தது. இவற்றின் உண்மையை அறியாத பலர் இந்தச் சம்சார பந்தத்தில் மூழ்கிக் கிடக்கின்றனர். தோன்றி மறையும் இந்த உடம்பின் நிலையாமையை எண்ணாமல் அதனை நிலையாக வைக்கவேண்டுமெனக் கருதித் தமது அருமந்த வாழ்நாளையெல்லாம் செலவழித்துத் தேடிய பொருளை உண்ணாதும் உடுக்காதும் பிறர்க்கீயாதும் வீணில் இருப்புப் பெட்டகத்தில் பூட்டி வைத்து மகிழ்ந்து கழிகின்றனர். இங்ஙனம் கடவுளால் கொடுக்கப்

பெற்ற உடல் பொருள் ஆவிகளை வீணில் கழிக்காது தனக்கென வாழாமல் பிறர்க்கென வாழ்வதே நமது முக்கிய நோக்கமாக இருக்க வேண்டுமென உறுதிபெறக் கூறிமுடித்தனர். அவர் கூறிய அமுத வாக்கை அகமகிழ்ந்து ஏற்றுக்கொண்ட கங்காம்பையார் நாள்தோறும் வைகறையில் எழுந்து, தமது கணவன் பாதத்தை முன்னர் வணங்கி இத்தகைய காதலையும் வாழ்க்கையையும் கொடுத்தருளிய கடவுளுடைய திருவருளைச் செய்நன்றி மறவாமல் சற்று நேரமாயினும் உள்ளமுருகச் சிந்தித்து, பின்னர் தம் காதலர் கூறிய உபதேச மொழியை நினைவு கூர்ந்து, பசவேசர்க்கு வேண்டிய உபசாரங்களை யெல்லாம் செம்மைபெறச் செய்துமுடித்து இஷ்டலிங்க பூஜையையும் முடித்துக்கொண்டு, தம் அகம் நோக்கிவரும் அடியார் முதலிய விருந்தினர்கட்கு மலர்ந்த முகமுடையராய் இன்சொல்லுடன் அறுசுவை உண்டியினையும் கொடுத்து இவ்வாறு இல்லறத்தை நடத்திவருவா ராயினர். இதனால் நமது பசவேசாது புகழும் உலகு எங்கணும் பரவிற்று.

அமைச்சியல்.

கலியாணபுரத்தில் பலதேவராகிய மாதுலரகத்தில் தம்முடன் வந்த அங்நாகாம்பை, சிவஸ்வாமி, சென்னபசவதேவர் முதலியவர்களுடன் இன்புற வாழ்ந்துவந்த நம்பசவேசர், சிலநாளானபின் பிறர் தேடிய பொருளைக்கொண்டு இல்லறம் நடத்தி இன்புற்று வாழ்தல் சோம்பேறிகளின் செயலென்றும், தாமாகவே ஓர் தொழிலைச்செய்து அதனால் வரும் பொருளைக்கொண்டு தமக்கும் பிறர்க்கும் பயன்பட வாழ்தலே முயற்சியுடையான் செயலென்றும் கருதினார். அதனால், அரண்மனையில் விச்சலமன்னனால் கொடுக்கப்பெற்ற உதவியமைச்சர் வேலையை மன்னன் முதலிய யாருங்கண்டு வியக்கும்படிச்செய்து தங் கடமையை யாற்றிவந்தனர்.

இங்ஙனம் வாழுநாளில் ஓர்நாள், விச்சலமன்னன் அரசவையில் சிம்மாசனத்தில் அமர்ந்திருந்தனன். கல்வியறிவிற்சிறந்த பலபண்டிதர்

கூடியிருந்தனர். அப்பொழுது கடவுளருளால் வானுலகத்தில் இந்திரன் எதிர்நின்றாடும் அரம்பையின் காதினின்றும் செம்பொற் சுந்தர வோலையொன்று சோர்ந்து வீழ்ந்தாற்போல் பழய ஓலைச்சுருளொன்று அந்தரத்தினின்றும் வீழ்ந்தது. பலருங்கண்டு மயங்கினர். அங்கிருந்தவருள் ஒருவர் அவ்வோலையை எடுத்துவந்து அரசர் பெருமானிடம் கொடுத்தனர். அரசன் அதனை வாங்கி விரித்து அதிலுள்ள எழுத்தை நோக்கித் தன் தலையெழுத்தென்ன உணராது மயங்கி அங்கிருந்த பண்டிதர்களிடம் கொடுத்தனன். பலரும் உணராது மயங்கினர். அரசனும் தனது சபையில் இதனைப் படித்துப் பொருளுரைப்பவர் ஒருவரும் இல்லையோவென ஆராய்ந்தனன், அஙகிருந்த பெரியாரொருவர் முதலமைச்சராகிய பலதேவருடைய மருமானாகிய பசவேசர் நுண்ணறிவுடையவர்; அவர் இதனைப்படித்துப் பொருள் கூறினுலுங் கூறலாம் என்றார். அரசன் கட்டளையின்மேல் பசவேசர் அவ்வோலையை வாங்கி எளிதில் படித்து, 'அரசர் பெரும! இவ்வோலையானது உமது சிம்மாதனத்தின்கீழ் பெரும்பொருள் நிதியிருப்பதாகக் கூறுகின்றது' என்றனர். அங்கிருந்த பண்டிதர் பொறாமையுற்று அதனை எப்படி உண்மையென நம்பமுடியும் என்றனர். உடனே பசவேசர், குறிப்பிட்ட இடத்தைத் தோண்டும்படிச் செய்து, பொன்மலை யொன்று பாதலத்தில் புகுந்து அவ்விடத்திற் றேன்றினாற்போல் தோன்றிய நிதியைக்காட்டித் தாம் படித்துர்காட்டிய ஓலையின் பொருளை மெய்ப்பித்தனர். அரசனும் பெரும்பயனடைந்து மகிழ்ச்சியுற்றான். அங்கிருந்த பெரியாரனைவரும் "நல்வினையே நமக்கு இப்பெரியாரைக் கொடுத்தது, இவர் கயிலையில் வாழும் இரண்டாம் சம்புவேயன்றி வேறின்று! இந்த பசவேசர் உரைமடந்தையாகிய கலைமகள் பொய்யாள் என்பதைப் புதுப்பித்து மெய்யாக்கினு ராயிற்று" எனக் காட்சியிற் கண்டு மகிழ்ந்தனர். அரசனும் பசவேசர்பால் அன்பு பாராட்டிப் பெரியாரென மதித்துவந்தான். இங்ஙனமிருக்க, சின்னாளில் பலதேவர் தம் வாழ்நாள் முடிய இவ்வுலக வாழ்வை நீத்துப் பரலோக வாழ்வையடைந்தனர். பாரளிமன்றத்தார்கூடி முதலமைச்சர் பதவிக்குரியார் பசவேசரே எனத் தேர்ந்துரைத்தனர். அரசன் முதலியோர் பெருஞ்சிறப்புடன் அப்பதவியைப் பசவேசர்க்குக் கொடுத்து வாழ்த்துரை கூறினர். பசவேசரும் தமது மாதுலரது தானத்தை அழகுபெறச் செய்தனர்.

பசவேசர் முதலமைச்சுரிமை பெற்றபொழுது கூறிய

உறுதிமொழி.

உலகத்தையாளும் கனந்தங்கிய மன்னர் பெருமானே!

அறிவிலும் அனுபவத்திலுஞ் சிறந்த பெரியோர்களே!

எல்லாம் வல்ல இறைவனருளாலும், உங்கள் பெருமதிப்பாலும் இப்பொழுது இந்த உயர்ந்த பதவியைப் பெற்றிருக்கின்றேன். மக்களது உண்மைக் கடமையும் எனது நோக்கமுமாகிய பரோபகாரச் செயலைச் செய்தற்கே இந்த உயர்ந்த பதவியைக் கடவுள் கொடுத்திருக்கின்றார் என்று உறுதியாக நினைக்கின்றேன்.

எனது ஆயுளையும், தேகத்தையும், உயிரையும் வஞ்சனையின்றிப் பிறர்க்குப் பயன்படும்படிச் செய்வேனாகுக. காமம் வெகுளி மயக்கம என்னும் முக்குற்றத்தையும் அறவே ஒழிப்பேனாகுக.

காலையில் எழுந்து கடன்களை முடித்துக் கடவுளைத் தொழுது எனக்கிது, என் மனைவிக்கிது, என் புதல்வர்க்கிது என்றெண்ணாது, என் மனமே எனக்குச் சான்றாக நிற்க, என் பணியனைத்தையும் பிறர்க்கே பயன்படும்படிச் செய்வேனாகுக.

சுட்டுதற்கரிய கூடல சங்கம தேவா! உமது சேவையாகிய பரோபகாரச் செயலில் எப்படிப்பட்ட தாழ்ந்த வேலையாயினும் செய்வேனேயொழிய என்பொருட்டு யாரிடத்தும் யாதொன்றையும் வேண்டமாட்டேன். யாரையும் வணங்கவு மாட்டேன்.

கூடுதற்கரிய கூடல சங்கம தேவா! நீர் கொடுக்கும் பொருளை உமக்காகவும், உமது அடியாருக்காகவும் செலவழிப்பேனே அல்லாது வேறெந்த விதத்திலுஞ் செலவழிக்க ஒருப்படமாட்டேன். உம்முடைய பொருளாகிய உடல் பொருள் ஆவி மூன்றையும் உமக்கே யுரியனவாக்குவேன்.

உரைமனமிறந்த ஒளியுடைப் பொருளே! எவ்வகைப்பட்ட துன்பம்வரினும் உள்ளும் புறம்புமொத்த உமது பூசையை மறக்க மாட்டேன். எப்படிப்பட்ட இடையூறும் பெரும் பசியும் நேர்ந்த பொழுதும் உமக்கு நிவேதனமாகாத யாதொரு பொருளையும் உட்கொள்ளமாட்டேன். எனக்கு இந்த அரசர் பெருமானால் கொடுக்கப் பெறும் பதவியையும் மரியாதையையும் உமது பிரதிநிதியாக நின்று ஏற்று உமக்கே உரியனவாக அர்ப்பிப்பேனாக.

சங்கமேசா! உமது செய்ந்நன்றியை மறந்து, உமது உடைமைப் பொருளாகிய ஏழைமக்களை நல்வழிப்படுத்த முயற்சிக்காது எனது சுகத்தைநாடி ஊண் உறக்கங் கொள்வேனாயின் யானிருக்கும் ஊரின்கண் சூரியனும் சந்திரனுந் தோன்றாதொழிக. உம்மினும் உமது செயலை மேற்கொண்டு நிற்கும் அரசனுடைய பணியை உண்மை வழியில் உயர்ந்ததாக மேற்கொண்டு வழிபடுவேனாக, என்றிவ்வாறு உறுதிமொழிகூறி முதல் மந்திரிப் பதவியை ஏற்றுக்கொண்டனர். அரசன் முதலாயினோர் அவரது உறுதிமொழியைக் கேட்டுத் தம்மை நல்வழிப்படுத்தவந்த அறக்கடவுளே யெனக்கருதி அன்புடன் அவரது கட்டளையை மேற்கொண்டு நடப்பாராயினர்.

பசவேசரது ஆட்சிமுறை.

நம் பசவேசராகிய அமைச்சர், நாள்தோறும் காலையிலெழுந்தவுடன் கடவுளைத் தொழுது தாம்செய்த உறுதிமொழிகளை ஒருமுறை சிந்தித்து ஞாபகப்படுத்திக் கொள்வார். ஒவ்வொரு கணமும் யாருக்கேனும் ஓர் நன்மை செய்தோமா என்னுங் கவலையேயன்றி வேறொன்றையும் நினையார். எஞ்ஞான்றும் அவர் கனவிலுங்கூட மதம் மாச்சர்யம் என்பன அணுகா. தாம் அமைச்சராயினும் தம்மெதிர்ப்பட்டோர் மிகத்தாழ்ந்த ஏழையாயிருப்பினும் அவரிடம் மரியாதை காட்டுவர். கடவுளால் படைக்கப்பட்ட மக்களைப் பொருளாலும், நிறத்தாலும், சாதியாலும், செயலாலும் உயர்ந்தோரெனவும் தாழ்ந்தோரெனவும் எண்ணாது யாரையும் ஒப்பாகக் கருதுவர். எல்லோரையும் ஒருவர் தமது மொழியால் நல்வழிப்படுத்தப் பெரிதும் முயல்வர்.

இனிய மொழியால் நல்வழிப்படாதபொழுது அவரை வெறுக்காது தம்மையே வெறுத்து ஊனுறக்கமொழிப்பர். சிவபூசைசெய்து துதிக்கும்பொழுதெல்லாம், 'ஓ கூடல சங்கமதேவா! இஷ்டலிங்கமூர்த்தியே! இவ்வுலகில் என்னினுந் தாழ்ந்தவர் யாவரும் இலர்; யானே நாயினுங் கடையேன்; பேயினுந் தீயேன். உமது உண்மை அன்பரைக் காட்டினும் பெரியார் யாருமில்லை. அவர் வழியே எனது மனமுஞ் செயலுஞ் செல்வனவாகுக' என்று சொல்லிக்கொள்வர்.

ஓர்நாள் காலையில் எழுந்து வழக்கம்போல் வெளியில் உலாவச் சென்றார். அப்பொழுதுதான் மழை சொரிந்து நின்றது. வீதியில் ஆங்காங்கே தண்ணீர் தண்ணளியுடையார் மனம்போல் தேங்கிநின்றது. தயிர்விற்கும் ஏழைக் கிழவியொருத்தி தன் தலையின்மேல் தயிர்ப் பானையைச் சுமந்துகொண்டு செல்வாளாயினள். நிலமெங்கும் ஒன்றில் நிலைபெறுதார் உள்ளம்போல் வழவழப்பாயிருந்தது; அதனால் அத்தயிர் விற்பாளது கால் நிலைகொள்ளாது வழுக்கி நிலை தவறுவதாயிற்று. சிறிது தூரத்தில் சென்றுகொண்டிருந்த பசவேசராகிய அமைச்சர் பெருமான் அதனைக்கண்டு ஓடிவந்து கீழேவிழாதபடி அம் முதியவளைத் தாங்கிப் பிடித்துக்கொண்டார். தன் வாழ்க்கையின் முடிவனைத்தையும் தயிர்க்கூடையில் வைத்திருந்த அக்கிழவியின் இரு கரங்களும் தனது ஆடை சோர்தலையும் உணராது தயிர்க்கூடையைப் பிடித்தவண்ணமாயிருந்தன. "உடுக்கை யிழந்தவன் கைபோல" என்னும் உவமைமொழி அவளிடம் பொய்யாயினும், "ஆங்கே யிடுக்கண் களைவதாம் பெரியாரியல்" என்னும் பொருண்மொழி அந்நரைத்த கிழவியைத் தாங்கிநின்ற நம் பசவேசர்பால் பொய்யாது உண்மையாயிற்று. அச்சமுற்று நடுங்கிநின்ற அக்கிழவியோ வள்ளலை நோக்கி, ஐயா! நீர் அமைச்சராயும் சிவாசார சீலபக்தராயுமிருந்தும் ஏழையாயும் கீழ்க்குலத்தினளாயுமுள்ள என்னைத் தொடலாமா? என்றனள். அமைச்சர், கிழவி! கீழ்க்குலம் மேற்குலம் என்பது யாது? எம்மைப் படைத்த கடவுள் கீழ்க்குலத்தவர் என்றும் சிலரை மேற்குலத்தவர் என்றும் நினைப்பரோ? ஒருக்காலும் நினையார். எக்குடியிற் பிறப்பினும் யாவரே யாயினும் கடவுளுடைய பார்வையில் யாரும் சமமாகக் காணப்படுவரேயன்றி வேறாகக் காணப்படமாட்டார். தான் பிறந்த குலத்தின் பயனாக ஒருவற்குப் பெருமையுங் கீழ்மையும் உண்டாகா.

குலத்திற் பிறந்தமாத்திரத்தில் நற்கதியைத் தராது. நற்குண நற்செயல்களே ஒருவற்கு நற்கதியைத் தரும். பணக்காரனுயினும் அதனுற் பயனில்லை. ஒருவன் அன்பும் அருளுமுடையனேல் அவனிடத்துக் கடவுளது அருட்சத்தியும், மக்களது மதிப்பும் தாமாகவே நிலைபெறும். மக்களாகப் பிறந்தார் ஒவ்வொருவரும் பிறரைச் சகோதர சகோதரிகளாக எண்ணவேண்டுவதே மானிடப் பிறவியின் தன்மை. மக்களது கடமை அங்ஙனமிருப்ப, வயதுமுதிர்ந்து அபாயத்திலிருந்த கிழவியாகிய நின்னைத் தொட்டதால் எனக்கு யாது குறை? ஓர் குறையுமில்லையே. கீழே விழுவதால் அடியொன்று மில்லாது தயிர்க் கூடையுடன் தப்பித்துக்கொண்டாயல்லவா அதுவே எனக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது. நீ ஞாபகத்துடன் சென்று தயிர்விற்று உனது இல்லத்திற்கு ஏகுவாய் என விடை கொடுத்து அத்தயிர்க்காரியை அனுப்பினர். இங்ஙனம் யாவரையும் ஒப்பநோக்கி அரசற்கும் குடிகட்கும் அன்புடையராய் வாழ்ந்துவந்தனர். (தொடரும்)

மெய்யுணர்தல்.

திருவாளர், பண்டித. ந. மு. வேங்கடசாமி நாட்டார்,

தமிழ் விரிவுரையாளர், திரிசிரபுரம்.

மெய்யுணர்தலாவது பிறப்பு வீடுகளையும், அவற்றின் காரணங்களையும் ஐயம் திரிபுகளால் அன்றி உண்மையான் உணர்தல். ஐயமாவது பல தலையாய வுணர்வு. அஃதாவது மறுபிறப்பும், இருவினைப்பயனும், கடவுளும் உளவோ இலவோ என ஒன்றில் துணிவு பிறவாது நிற்றல்; பேய்த்தேரோ புனலோ, கயிறோ அரவோ, குற்றியோ மகனோ, இப்பியோ வெள்ளியோ எனத் துணியாது நிற்பதும் ஐயமே. இது சந்தேகம் எனவும் படும். திரிபாவது ஒன்றனைப் பிறிதொன்றாகத் துணிதல். அஃதாவது மறுபிறப்பும், இருவினைப் பயனும், கடவுளும் இல்லையெனத் துணிதல்; பேய்த்தேரை நீரென்றும், கயிற்றை அரவென்றும், குற்றியை மகனென்றும், இப்பியை வெள்ளி

யென்றும் துணிதலும் திரிபே. இது விபரீதம், மருள், மயக்கம், அவிச்சை, ஆணவம் எனவும் கூறப்படும்.

க. மெய்ப்பொருளல்லவற்றை மெய்ப்பொருளென்று உணரும் திரிபுணர்வால் இன்பமில்லாத பிறப்பு உளதாகும். தேவர், மக்கள், நரகர், விலங்கு என்னும் நால்வகைப் பிறப்பிலும் துன்பமே உள்ள தென உணர்க.

உ. மயக்கத்தின் நீங்கி மெய்யுணர்வினை உடையராயினார்க்கு அம்மெய்யுணர்வு பிறப்பினை நீக்கி, வீடு என்னும் நிரதிசய இன்பத்தை அளிக்கும். இதனால் வீட்டிற்கு நிமித்த காரணம் கேவலப் பொரு ளென்பது கருதற்பாற்று.

ஙு. ஐயத்தினின்றும் நீங்கி மெய்யுணர்ந்தார்க்கு அவர் எய்தி நின்ற நிலவுலகத்தினும் எய்தக்கடவதாய வீட்டுலகம் அணித்தாதலை உடையது. ஒருவாற்றால் பிறர் மதத்தை மறுத்துத் தமது மதத்தை நிலைநிறுத்துதல் எல்லாச் சமய நூல்கட்கும் இயல்பாகலின், அவை கூறுகின்ற பொருள்களுள் யாது மெய்யென நிகழும் ஐயத்தினை யோக முதிர்ச்சியுடையார் தம் அனுபவத்தால் நீக்கி மெய்யுணர்வாராகலின், அவரே இங்கு 'ஐயத்தினின்றும் நீங்கி மெய்யுணர்ந்தார்' எனப்பட் டனர். அவர்க்கு அவ்வனுபவ வுணர்வு முதிர்ந்து வரவரப் பழைய உலகியலுணர்வு குறைந்து வருமாகலின், அஃது அதன் பயன்மே லேற்றி 'நிலவுலகத்தினும் வீட்டுலகம் அணித்தாதலை யுடையது' என்று கூறப்பட்டது.

ச. ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம் என்னும் ஐந்து புலன் களிலும் செல்லுதலால் ஐந்தாகிய உணர்வு அப்புலன்களை விட்டுத் தமக்கு வயப்பட்டவிடத்தும் மெய்யினை உணர்தலில்லாதவர்க்கு அத னாற் பயனில்லையாம். ஐந்தாகிய உணர்வு—மனம்; அது வயப்படுத லாவது புலன்களிற் செல்லாது மடங்கி ஒருமுகப்பட்டுத் தாரணையில் நிற்றல்; அங்ஙனம் நின்ற வழியும் அது வீட்டினைத் தாராமையின் 'பயனில்லை' எனப்பட்டது. மனவடக்கம் ஒன்றுமே அமையுமென் பார் கொள்கை இதனால் மறுக்கப்பட்டவாறு அறிக.

ரு. யாதொரு பொருள் யாதோரியல்பினதாய்த் தோன்றினும் அத்தோன்றிய விதத்தைக்கண்டு விடாமல் அப்பொருளிலிருந்து மெய்யாகிய பொருளைக் காண்பதே மெய்யுணர்வாகும். பொருள்தோறும் உலகத்தார் கற்பித்துக்கொண்டு வழங்குகின்ற கற்பனைகளைக் கழித்து, ஒழிந்துநின்ற உண்மையைக் காண்பது என்றபடி. அஃதாவது கோச்சேரமான் யானைக்கட் சேய் மாந்தரஞ் சொலிரும்பொறை என்றவிடத்து அரசனென்பதோர் சாதியும், சேரமான் என்பதோர் குடியும், யானைக் கண்ணுடையான் என்பதோர் வடிவும், சேய் என்பதோர் இயற்பெயரும், மாந்தரஞ்சொல் இரும்பொறை என்பதோர் சிறப்புப் பெயரும் ஒரு பொருளின்கண் கற்பனையாகலின், அவ்வாறுணராது நிலம் முதல் உயிர் ஈறாகிய தத்துவங்களின் தொகுதியென உணர்ந்து, அவற்றை நிலம் முதலாகத் தத்தம் காரணங்களுள் ஒடுக்கிக்கொண்டு சென்றால் காரண காரியங்கள் இரண்டும் இன்றி முடிவாய் நிற்பதனை உணர்தலாம். இயங்குதிணையும் நிலைத்திணையுமாகிய பொருள்களெல்லாம் இவ்வாறே உணரப்படும் என்க.

சு. பெறுதற்கரிய இம்மக்கட்பிறப்பிலே அனுபவமுடைய தேசிகர்பால் உபதேச மொழிகளைக் கேட்டு அதனால் மெய்ப்பொருளை உணர்ந்தவர் மீண்டு இப்பிறப்பின்கண் வாராத (வீட்டு) நெறியை அடைவர். வீட்டிற்கு நிமித்த காரணமாகிய முதற்பொருளை உணர்தற்குரிய கேள்வி, விமரிசம், பாவனை என்னும் உபாயம் மூன்றனுள் கேள்வி இதனாற் கூறப்பட்டது. இது சிரவணம் எனவும் கூறப்படும்.

எ. அங்ஙனம் கேட்ட உபதேச மொழிப்பொருளை ஒருவன் உள்ளமானது காட்சி அனுமானம் ஆகமம் என்னும் அளவைகளாலும் இது கூடும் கூடாது எனத் தன்னுள்ளே தோன்றும் யுக்தியாலும் தெளிவுற ஆராய்ந்து அதனால் முதற்பொருளை (கடவுளை) உணருமாயின் அவனுக்கு மாறிப் பிறப்புள்ளதாக நினைக்க வேண்டுவதில்லை இதனால் விமரிசம் கூறப்பட்டது. இது மனனம் எனவும், சிந்தித்தல் எனவும் கூறப்படும். தெளிதலும் இதன்கண் அடங்குமாறு அறிக.

அ. பிறப்பிற்கு முதற்காரணமாகிய அறியாமைகெட வீட்டிற்கு நிமித்த காரணமாகிய செம்பொருளை இடைவிடாது பாவித்தலே மெய்

யுணர்வாம். தோற்றக்கேடுகள் இல்லாமையால் நித்தமாய், நுண்மையால் தன்னை யொன்றும் கலத்தல் இல்லாமையால் தூயதாய், தான் எல்லாவற்றையும் கலந்து நிற்கின்ற முதற்பொருள் (கடவுள்) விகாரமின்றி எப்பொழுதும் ஒரு தன்மைத்தாதல்பற்றி அது 'செம்பொருள், எனப்பட்டது. உயிர் உடம்பினின்றும் நீங்குங்காலத்தில் அதனால் யாதொன்று பாவிக்கப்பட்டதோ அதுவாய் அவ்வுயிர் தோன்றுமென்பது எல்லா ஆகமங்களுக்கும் துணிபாகலின், வீடெய்துவார்க்கு அக்காலத்துப் பிறவிக்கேதுவாகிய பாவனை கெடுதற்பொருட்டுப் பரம்பொருளையே பாவித்தல் வேண்டுதலால், அதனை முன்பே பயிலுதலாகிய இதனினும் சிறந்த உபாயமில்லை என்பதறிக. இதனாற்பாவனை கூறப்பட்டது. இது சமாதி யெனவும், நிட்டை கூடல் எனவும் கூறப்படும்,

௬. ஒருவன் எல்லாப் பொருளுக்கும் பற்றுக்கோடாகிய அச்செம்பொருளை உணர்ந்து இருவகைப்பற்றும் அற யோகநிலையில் ஒழுகவல்லானாயின் அவனே முன் அடையக் கடவனவாய்நின்ற துன்பங்கள் அவ்வுணர்வு ஒழுக்கங்களை அழித்துப் பின்பு அடையமாட்டா. யோகநெறி—இயமம், நியமம், ஆதனம் (இருப்பு), பிராணாயாமம் (உயிர்நிலை), பிரத்தியாகாரம் (மன ஒருக்கம்), தாரணை, தியானம், சமாதியென எண் வகைப்படும். அவற்றுள் தியான சமாதிகளே ஈண்டுக்கொள்ளற்பாலன. அடையக்கடவனவாய் நின்ற துன்பங்களாவன பிறப்பு அனாதியாய் வருதலின் உயிரால் அளவின்றி ஈட்டப்பட்ட வினைகளின் பயன்களுள் இறந்த உடம்புகளால் அனுபவித்தனவும், பிறந்த உடம்பால் முகந்து நின்றனவும் (பிரார்த்தங்களும்) ஒழியப் பின்னும் அனுபவிக்கக் கடவனவாய்க் கிடந்தவை.(சஞ்சித வினைப்பயன்கள்) அவை விளக்கின்முன் இருள் கெடுதல்போல் ஞானயோகங்களின் முன்னர்க்கெட்டுவிடுதலால் பின் அடையமாட்டா என்பதறிக.

௰. ஞான யோகங்களின் முதிர்ச்சி யுடையார்க்கு விருப்பு, வெறுப்பு, அவிச்சை என்னும் இக்குற்றங்கள் மூன்றனுடைய பெயருங்கூட அழிந்துவிடுதலால் அவற்றின் காரியமாகிய வினைப்பயன்கள் உளவாகா. இடையறாத ஞான யோகங்களின்முன் இக்குற்றங்கள் மூன்றும் காட்டுத்தீ முன்னர்ப் பஞ்சுத்துப் போலும். ஆகலின்

'பெயரும் அழிதலால்' எனப்பட்டது. காரணமாகிய அக்குற்றங் களைக் கெடுத்தவர் காரியமாகிய இருவினைகளைச் செய்யாமையால் அவர்க்கு வரக்கடவனவாய துன்பங்களும் (ஆகாமியங்களும்) இல்லை யென்பது இதனாற் கூறப்பட்டது. இவ்வாற்றால் மெய்யுணர்ந்தார்க்கு நிற்பன எடுத்த வுடம்பும், அது முகந்துகொண்ட வினைப்பயன் களுமே (பிராரத்தங்களுமே) என்பது பெறப்படும்.

இக்கட்டுரையின் கருத்தென்னை யெனின்,—மக்களாகப் பிறந் தார் உலகியற் பொருள்களைக் கண்டவாறு எண்ணி மயங்காது மெய் யுணர்ச்சியைப் பெறமுயலுதல் வேண்டும். அதுவும் தக்க ஆசிரியரை யடுத்துப் பெறுதல் வேண்டும்- மெய்யுணர்ச்சியால் அவிச்சை முதலிய முக்குற்றங்களையும் களைதல் வேண்டும். முக்குற்றங்களைக் களைந்து செம்பொருளாகிய சிவபரம் பொருளைக் கணப்பொழுதும் மறவாது பாவித்தல் வேண்டும். உடலினின்றும் உயிர் நீங்குங்கால் பாவிக்கப் படுபொருள் உலகியற் பொருளாயின் பிறவிப்பிணியடைதல் தவிரா தாதலின், செம்பொருளாகிய சிவலிங்கப் பெருமானைப் பாவித்து அவ ரது நிரதிசய இன்பத்தைப் பெறுதல் வேண்டும். அந்தப் பாவனையும் இறுதிக்காலத்தில் எண்ணித் தன்னாலும் பிறராலும் எளிதில் அடைவ தொன்றன்றாகலின், நாடோறும் நாம் இறக்கின்றோமென வுணர்ந்து எவ்வகை நுகர்ச்சியிலும் எல்லாப் பொருள்கட்கும் பற்றுக்கோடாகிய சிவலிங்கப் பெருமானே நீக்கமறநின்று நுகர்கின்றானென்று அவற்றை அவர்க்குரியனவாக்கல் வேண்டும். இதுவே இஷ்டப் பிராணபாவம் என்றவற்றுள் பாவம் எனப்பெறும். இந்தச் சிவஞானயோக முதிர்ச்சி யின் பயனையே தவப்பிரகாசராம் சிவப்பிரகாச முனிவரும்,

முந்திரு வினையுந் தமவென விருப்பின் முற்றவற் றின்பயன் றருவாய்
வந்தவை நினவென் றிருப்பினங் கவற்றை மாற்றிவீ டறவருள்குவையே
நிந்தையி லென்னெஞ் சுனதுநெஞ் சென்மெய் நினதுமெய் யென்றனிந் திய
னிந்திய மெனக்கொண் டென்கரத் திருக்கு மீசனே மாசிலாமணியே. [நின்

என்றருள்வாராயினர். இங்ஙனம் முத்தியடைந்தார் அநிமிடன் என்ற பெரியாரும் பசவேசரது மனைவியாராகிய நீலாம்பிகையாருமாவர்.

வீரசைவ மதத்தின் உண்மைநிலை.

ஸ்ரீமத், சச்சிதாநந்த அன்னதான சுவாமிகள்,
[ஆம்பூர், வட ஆர்க்காடு ஜில்லா.]

அன்பர்களே! இவ்வுலகின்கண் சிறியனவும் பெரியனவுமாக விளங்கும் மதங்கள் பலவற்றிற்கும் இடங்கொடுத்து, அவையனைத்தையும் தன்னுள் அடக்கிக்கொண்டு திகழ்கின்ற வீரசைவ மதமாகிய அன்னையின் சிறப்பினை எவ்வளவுதான் எடுத்துரைப்பினும் மிகையாகாது. "நவீரசைவ சத்ருசம் தமமஸ்த ஜகத்ரயே" என்று சங்கரர் ஆகமங்களில் விவரித்துள்ளார். அவ்வாறாயின் இம்மதம் மற்றெல்லா மதங்களுக்குந் தலைமையாக விளங்குவதெங்ஙனம்? மற்ற மதங்கட்கும் இதற்குமுள்ள வேற்றுமைதானென்ன? இதன் உன்னத நிலைக்குக் காரணங்கள் யாவை? என்று கூர்ந்து ஆராய்வதே இக்கட்டுரையின் முக்கிய நோக்கம்.

இவ்வுலகிலுள்ள பல மதங்களின் கொள்கைகளையும் ஆராய்ந்து பார்த்தால் அவையனைத்தும் பேரின்ப வீட்டையடைதற்கு மூன்று உத்தமமான வழிகளைப் போதிப்பதாக நம்முன்போந்த உண்மை ஞானியாரான :இராமமூர்த்தசுவாமிகள் கூறியுள்ளார். இம்மூன்று வழிகளையும் வடமொழியின்கண் 'தத்சைவாகம்' 'ததைவாகம்' 'த்வமேவாகம்' என்று கூறியுள்ளார்; அவற்றைப்பற்றிச் சற்றே ஈண்டு ஆராய்வாம்.

1. 'தத்சைவாகம்' எனின் சிருஷ்டி கருத்தாவாகிய ஈசுவரன் கருணையினாலேயே யான் உயிர்வாழ்வது, அவரது கருணையின்றி யாதொன்றும் நடவாது என்றிருத்தல். இதனைப் பெரியார் இன்ப வீட்டு வாயிலின் முதற்படியென்று கூறுவர். எவ்வாறெனில், ஈசன் திருவடித் தாமரையினைக் கண்டு இன்பமுற ஆவல்கொள்ளும் ஒருவனுக்குப் பக்தியே முக்கிய சாதனமாக இருக்கிறது. இவ்வன்பன் ஈசன் சேய்மையிலிருப்பதாக நினைத்திருப்பான். தூரத்தில் வருவோனைக்

கண்டு மனிதனே வேறென்றோ என்று ஐயமுற்று அண்மையில் வந்தவுடன் அவனே நமது தோழனாக இருக்கவுங் காண்கின்றோம். இம் முதற்படி பக்திமார்க்கத்தின் இளங்குழவி போலிருக்கின்றது. இச் சிறுகுழந்தை பாலப்பருவங் கடவாது குமாரப் பருவத்தையடைவது எங்ஙனம்? இஃது இயையாததுபோல அன்பனும் முதலில் 'தத் சைவாகம்' முதலிய கடவாது 'த்வமேவாகம்' என்னும் கடைசிப் படியை அடைவது அரிது.

வீட்டையடைதற்குப் பக்தி பெருஞ்சாதகமாகின்றது. அச்சத்துடன் கூடிய அன்பாகிய இந்த பக்தி ஒருவன்பா லிருக்குமாயின் அப்புனிதனது வாழ்க்கையின் நலனை எடுத்துரைப்பவர் யார்? வாழ் நாளில் ஒவ்வொரு கணமும் தான் செய்யும் செய்கையும், எண்ணமும் இறைவனது திருவருளினாலேயே நடைபெறுகின்றன என நினைத்திருப்பதனால் அந்த பக்தனுக்குத் துன்பமென்பதேயில்லை; அனைத்தும் இன்பமயமாகவே தோன்றும். இந்நிலை அரிதாக இருப்பினும் முத்திக்கு முதற்படியென்பதே பெரியோரது கொள்கை.

இன்ப நெறியின் இரண்டாம்படி 'தவைவாகம்' என்பது: இச்சொற்றொடருக்கு எனது உடல் உயிர் பொருளனைத்தும் உன்னுடையனவே என்பது பொருள். இதன்கண் ஐயனும் அன்பனும் உயிர்த்தோழன் போன்று ஒன்றுபட்டிருத்தல். இந்நிலை சாமீப்யத்தின் அறிகுறி. இந்நிலையில் அன்பனுவான் முதற்படியின் கொள்கையைக் கடந்து மேற்சென்று இறைவன் தூரத்திலில்லாது தன் மனத்தையே கோயில் கொண்டிருத்தலை யுணர்ந்துகொள்கின்றான். எல்லாப் பொருள்களினுஞ் சிறந்தவனும் தன்னின்னுயிர்க்குத் துணைவனும் அப்பனாகிய இறைவன் இருக்கின்றானென்று அறிந்தமையின் அப்பெருமானை அந்த அன்பன் தன்னுயிரினும் அதிகமான அன்புடன் நேசிக்கின்றான். அவனுக்கு அன்பன்றி மற்றெதுவும் முன்னில்லாது. அவனது ஆற்றலும் அளவற்றது. உலக வாழ்க்கையில் உயர்பதவியை அடைந்த பெரியாரின் தயவிருக்குமாயின் நமக்கு எவ்வளவு ஆற்றலுண்டாகின்றது. ஒருங்கே உலகமனைத்தையும் படைத்த முழுமுதற் கடவுள் தன்னுள் இருப்பதாக அறிவோமாயின் அப்பொழுதுண்டாகும் ஆற்றலை என்னென்று இயம்பமுடியும்!

முத்திநெறியின் மூன்றும்படி 'த்வமேவாகம்' என்பது; இதன்பொருள் நீயே நான் என அறிந்திருத்தல். இந்நிலையின்கண் சிவபெருமான் தூரத்தின்மையும், தன்னுள் உண்மையுமான நிலைகளைக் கடந்து அப்பெருமானுடன் இரண்டறக் கலந்து ஏகீபாவமாய் விடு கிறான். இதனையே பெரியோர் சீவப்பிரம ஐக்கியம், இலிங்காங்க சம ரசம் என்று கூறுவர். இம்மூன்றும்படியின் உயரிய நோக்கமே வீர சைவ மதத்தின் முக்கிய குறியாக இருக்கின்றது. இம்மதத்தின் ஐக் கியத்தல அனுபவமே மற்றெல்லா மதங்களின் ஆத்தும ஞானத்தின் முடிபாக இருக்கின்றது. இம்மதத்தின் கொள்கையே ஏனைய மதங்க ளின் கொள்கைக்கு அங்கமாகின்றது.

அங்ஙனமாயின் இவ்வீரசைவ மதத்தின் சிறப்பினை அறிய வேண்டுவது இன்றியமையாததன்றோ? இந்துமதத்தின்கண் ஆன்ம ஆராய்ச்சியை அறிவாளர் முப்பெரும் பிரிவாகப் பிரிக்கின்றனர். அவை துவிதம், விசிட்டாத் துவிதம், அத்துவிதம் என்பன. இவற் றுள், முதலதன்கண் அன்பன் ஓர் யந்திரமாகவும் அப்பன் அதனை நடாத்துபவனாகவும் கருதப்படுகின்றது. இரண்டாவதன்கண் ஐயன் அதன்புறத்தேயிருந்து நடப்பிக்காது அதனுள்ளேயேயிருந்து நடப் பிக்குஞ் சக்தியைப் போன்று தோன்றுகின்றான். மூன்றாவதாகிய அத்துவிதத்தின்கண் இவன் அன்பன், அவன் இறைவன் என்னும் வேற்றுமையற்று அனைத்துந் தானாய்விடுகிறான். முடிவில் இந்நிலையே பேரின்பத்தின் அறிகுறி. இந்நிலையின் பொருட்டே மதமனைத்தும் தத்தம் நெறியில் முயன்றுவருகின்றன.

ஆனால் "ஜீவோ பிரம்மைவ நாபர" என்னும் சீவனும் சிவ னுமாகிய இரண்டும் ஒன்றாக விளங்கும் ஒப்பற்ற தன்மை அனுபவத் திற் காண்டல் அரிதாகின்றது. ஆனால் 'அவனருளாலே யவன்றாள் வணங்கி' என்பதற்கியைய அவ்விறைவன்மாட்டு வைக்கும் பக்தியி னால் அந்த உயர்ந்த நிலையையும் அடையலாம். நிற்க துவிதம், விசிட் டாத்துவிதம், அத்துவிதம் என்னும் மூன்றும் ஒன்றற்கொன்று இயைபுடையனவா? தனித்தனியே நிற்பனவா? என்பனவற்றை ஆராய்வாம். இம்மூன்றும் ஒன்றைவிட்டு ஒன்று தனிப்படின் ஒவ்வொன்றும் குறைபாடு உடையனவேயாகும். ஒருவன் துவிதநிலை

ஒன்றுலேயே இன்பநிலை அடைதல் முடியாது. விசிட்டாத்துவிதம், அத்துவிதம் என்னும் இரண்டனுள் ஒன்றுலேயே ஒருவன் இறுதி நிலையை அடைதல் எளிதன்று. ஏனெனில் ஒருவனுக்குப் பிறக்கும்பொழுதே அத்துவித ஞானம் வருதல் எளிதன்று. துவிதியாகிய மற்றவனுக்கோ அத்துவித அனுபவம் இல்லையேல் இன்பநிலை கூடுதல் இல்லை. ஆதலால் இவை மூன்றும் தனிப்படின் குறைவுடையனவே என்பது தெள்ளிதின் விளங்குகின்றது.

ஆனல் இவை அனைத்தும் ஒரு நெறியின்கண் கிடைக்கப் பெற்று எங்ஙனம் ஒன்றற்கொன்று உதவிபுரிந்து உயர்நிலையை அடையச் செய்கின்றன வென்பதைச் சிறிது ஆராய்வாம். மேலேகூறிப் போந்த மூன்று நெறிகளைத் தவிர முத்தியளிக்கவல்ல வேறு நெறிகளில்லை. ஆனல் இவற்றுள் ஒவ்வொன்றும் தம்மில் பூரணமான தென்று ஒன்றனைப்பற்றி வழிபடும் அன்பர்கட்கு முழுசமரசானுபவம் கிடைப்பதோ அரிது. ஆனல் வீரசைவ மதத்தில் மாத்திரம் இவையனைத்தும் பொருந்தி ஒன்றற்கொன்று உதவியாக இருந்து ஐக்கிய பதவியை எளிதில் அடையச் செய்கின்றன என்பதை ஆராய்தல் வேண்டும். " அல்பக்கிரியா பஹுபலா வீரசைவ மகேஸ்வரி " என்று சிவபெருமான் பாரமேசுவர ஆகமத்தில் கூறியுள்ளார். இந் நெறி காமிய கருமங்களின் வெறும் போராட்டமும் அன்று. பல தெய்வ வழிபாடுகளின் கடமையுமன்று. ஆனல் சீவன் ஒளியில் கலந்து பேரின்பத்தை நுகர்தற்குரிய பெருநெறியைச் சுட்டிக்காட்டுந் தன்மையது இம்மதம். இந்த ஒப்பற்ற மதத்தினைத்தான் வீரசைவப் பெரியார் சடுத்தல மார்க்கமென்று கூறுகின்றனர், பக்தன் ஐக்கிய இன்பத்தை அடையவேண்டுமாயின் முறையாக இந்த ஆறுபடிகளின் வழியாகத்தான் ஏறிச்செல்லல் வேண்டும். இவ்வாறு படிகளுக்கு மூவகையான தீக்ஷைகள் காரணமாகின்றன. இம்மூன்று தீக்கைகளுக்கும் மேலேகூறிய மூன்று மார்க்கங்களும் ஒற்றுமைப்படுவனவாகக் காணப்படுகின்றன. இதனைத்துருவி ஆராய்வாம்.

" ஏகமேவ பரப்பிரம்ம சச்சிதானந்த லக்ஷணம் சிவத்துவம் " என்னும் சிவாகமத்தின்படி ஈசன் ஒருவனுயினும் வழிபடும் அன்பர்களின் கற்பனைக்கேற்ப மூன்றுவிதமாகத் தோற்றப்படுகிருன். அதனை

வீரசைவத்தின்கண்ணே முறைமே இஷ்டலிங்கம், பிராணலிங்கம், பாவலிங்கம் என்று கூறுகின்றனர், இம்மூன்று நிலைகளில் ஈசன் பக்குவத்திற்கேற்ப நின்று உதவிபுரிகின்றான். முதல் நிலையில் இறைவன் யந்திரத்தைநடத்துபவன்போல் உலகத்தை நடாத்தும் புண்ணியனாக விளங்குகிறான். இரண்டாம் நிலையின்கண் தூலமாகக் காணப்படும் அனைத்தினுள்ளும சூக்குமமாக நிறைந்து நின்று ஆட்டிவைப்பவன்போல் தோன்றுகின்றான். மூன்றாவதாகிய பாவநிலையின்கண் உள்ளும் புறம்பும் நீக்கமற நிறைந்திருக்கும் பரம்பொருளின் உண்மை நிலையை நன்கு அறிகின்றான். சோதியின்கண் ஐக்கியமடைதற்கு இம்மூன்று நெறிகளும் ஒருங்கே வேண்டற்பாலன. முதற்படியின் கண் அன்பனுக்கு ஐயன் உலகத்தினும் வேறாயிருந்து இதனை நடப்பிக்கும் பேராற்றலான் என்பது உடன்பாடாகும். இந்நிலை அன்பு பெருகப் பெருக உலகத்தின்கண் வெறுப்பு தோன்றும். அப்பொழுது சற்குருவானவர் அவனது மனோபாவமுணர்ந்து கிரியாதீக்ஷைகளின் உதவியால் துவிதநிலையான அனுபவத்தைத இஷ்டலிங்கதாரணஞ் செய்வித்து அதன்வழித்தான நியமங்களை எடுத்துக்காட்டி விளக்கியருளுவர், இந்த நிலையில் அன்பன் இஷ்டலிங்கத்தினிடம் முழுமனதுடன் பக்தி பண்ணிவருகிறான். இதில் நன்றாய்ப் பழகியபின்னர் இரண்டாம் நிலையாகிய 'த்வைவாகம்' நிலையை இன்பவுடலாகிய சூக்கும தேகத்தின்கன் மந்திரதீக்ஷையின் உதவியால் அந்தரத்தில் சூக்குமமாயிருக்கும் பிராணலிங்கத்தைக் காட்டிக்கொடுத்து, நீ எவ்வாறு உன்னுடலின்கண் சைதன்னியமா யிருக்கின்றாயோ அவ்வாறே பிராணலிங்கமானது இவ்வுலகம் அனைத்தையும் தன்னுள் அடக்கிக்கொண்டு ஆட்டிவைக்கின்றது என்பதை விளக்கிக் காட்டுவர். இந்நிலை பழுத்த பிறகு அத்துவித நிலையை அன்பனது யோகதேகமென்னுங் காரண சரீரத்தின்கண் வேத தீக்ஷா பலத்தால் உள்ளும் புறம்பும், மேலுங் கீழும், சேய்மையினும் அண்மையினும் எங்கும் நீக்கமற நிறைந்து தானே தானாயிருககும் பாவ அனுபவத்தைத் தெரியக்காட்டி, சீவன் உலகம் ஈசன் என்னும் வேற்றுமை தோன்றாது நினைத்தலும் மறத்தலுமற்று விளங்கும் சச்சிதானந்த சொரூபத்தைக் காட்டுவர். அன்பன் அந்த நிலையின் அனுபவத்தை அடைந்து சமாதி அடைந்துவிடுகிறான்.

மேலேகூறிய மூன்று நெறிகளும் வீரசைவத்தின்கண் அமையப்பெற்று ஒன்றுமற்ற தனக்கு உதவிசெய்து மேல் நிலையை அடையச் செய்கின்றன எனச் சிறிது அறிந்துகொண்டோம். இம்மூன்று வழிகளையும் ஆறுதலங்களாக வகுத்திருக்கின்றனர். அதை, (1) பக்தத் தலம், (2) மகேசத்தலம், (3) பிரசாதித்தலம், (4) பிராணலிங்கித்தலம், (5) சரணத்தலம், (6) ஐக்கியத்தலம் என்பன. முதலிரண்டு தலங்களினும் அன்பனும் ஐயனும் ஊழியனும் யஜமானனுமாயிருந்து தொண்டு புரிந்து வருவதால் துவிதமாகிய முதற்படியாகும். இடையிரண்டு தலங்களினும் அன்பன் இறைவன் இவ்வுலகமனைத்தினும் வியாபித்துச் சைதன்னிய ரூபமாகவிருந்து அனைத்தையும் ஆட்டிவைக்குந் திறனுடையவன் என்று கருதுவதால் இடைநிலையாகிய விசிட்டாத்துவிதமாகின்றது. கடையிரண்டு தலங்களினும் அன்பன் தான்வேறு கடவுள்வேறு என்னும் ஐயப்பாடற்று, சுவாலை வாய்ப்பட்ட கருப்பூரம் போன்றும், தீயின்வாய்ப்பட்ட ஏனைய பொருள்களைப் போன்றும், அதுவே தானாய் விடுகின்றான்.

மேற்கூறிய ஆறுதலங்களினும் அன்பன் முறையே முதலில் பக்திபுரிவதனால் பக்தனாய், இரண்டாவதன்கண் பக்தியுடன் அதன் முதிர்ச்சி காரணமாக மகேசனாய் என்னாலும் பிறராலும் வணங்கப்படுபவனாய், மூன்றாவதன்கண் முதலிரண்டுடன் பிறருக்கும் தன் பக்தியை உபதேசிக்கும் ஆற்றல்பெற்று, நாலாவதன்கண் இறந்துபடும் இவ்வுடலைக்கடந்து அதனுள்ளிருந்து ஆட்டிவைக்கும் பொருள்தானேயாய், ஐந்தாவதன்கண் குணங்களனைத்தும்பெற்றுப் பூசிக்கத்தகுந்த நிலையை அடைவதுடன் தான் இறைவன் வதியும் ஆலயமாய் விடுகிறான். ஆறாவது படியின்கண் மனத்தானும் வாக்கானும் காயத்தானும் தான் வேறாகாது இறைவனில் கலந்து ஏகமாய் விடுகின்றான். இந்த சடுத்தல மார்க்கம் பக்தியுடன் படிப்படியாக மேல்நோக்கச்செய்து தொடக்கத்திலிருந்து ஒன்றையும்விடாது கடைசியில் ஐக்கியத்தைச் சுலபத்திலடையச் செய்கின்றது.

வீரசைவரும் பிறரும் இம்மதத்தின் உயரிய கொள்கைகளை ஆராய்ந்து மேற்கொண்டு ஒழுகி வருவாராயின் எளிதில் இன்பநிலை அடைதல் திண்ணமென்பதில் ஐயமின்று. எல்லா மதங்களின் கொள்

கைகள் இதனுள் விரவியிருத்தலினால் நண்பரிற் சிலர் மதங்களெல்லாம் உண்டான பின்னர் அவற்றின் கொள்கைகளைச் சிறிது சிறிதாகச் சேர்த்து ஒரு மதமாக்கினரோ என்றும், பக்குவம் நோக்கிக் கூறியும் அனுட்டித்தும் காட்டிய ஆசிரியர் கருத்தை வேறு வேறாக நோக்கி வீரசைவர்களுள் துவைதி, விசிட்டாத்துவைதி, அத்துவைதி என மூன்று பிரிவினர் உண்டோ எனவும் ஐயுறுகின்றனர். அங்ஙனமன்று. இந்த வீரசைவமதம் மிகப் பழமையானது, எல்லாவற்றிற்குந் தாயக மாகத் திகழ்ந்து வருவது என்பதற்குச் சான்றுகள் பலவுள்ளன. இம்மதம் வேதகாலத்திலிருந்தே விளங்கி வருவதென்பதற்குப் பல வேதப் பிரமாணங்களிருக்கின்றன. மற்றும் மூவாயிரம் வருடங்களுக்கு முள்ளரே பாரசீகம் பாபிலோன் நாடுகளுக்கரசனாயிருந்த சாலமோன் **(Solamon Thiarsi)** என்பவன் இம்மதத்தின் பெருமையை அறிந்து தன் நாணயத்தின்கண் அறுகோண வடிவாகிய பிரணவத்தைப் பதிப் பித்திருந்தான். அவன் இந்நாட்டோடு வியாபாரம் புரிந்ததால் அது அறியக்கிடக்கின்றது.

தமிழ்நாட்டு நிகழ்ச்சிகள்.

சைவ சித்தாந்த சமாஜம்.

இந்த மகா சமாஜத்தின் **24**-வது கூட்டம் திருவெண்ணெய் நல்லூரின்கண் **22, 23, 24—12—1929** இம்மூன்று தினங்களிலும் திருக்கோவலூராதீனம் திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீ-ல-ஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் தலைமை வகித்தருளச் சிறப்புற நடைபெற்றது. பல அறிஞர் உயரிய சொற்பொழிவு செய்து மகிழ் வித்தனர். சமயச் சார்பான சில தீர்மானங்கள் நிறைவேறின; மடாதி பதிகளை ஞாபகமூட்டி ஊக்குவதற்காகப் பெரியார் சிலர் உறுப்பின ராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றமை அவற்றுள் பாராட்டத் தக்கது. சிவாசாரிய சுவாமிகளுடைய முன்னுரையும், முடிப்புரையுமான மகோபந்நியாசம் யாவரையும் இன்பக்கடலில் திளைக்கச் செய்தது. திருவாளர் சின்னசாமி ரெட்டியார் அவர்களுடைய முயற்சியும் முறை யும் பாராட்டற்பாலன. சமாஜத்தின் நோக்கங்கள் நிறைவேறுக.

சென்னை வீரசைவ சங்கம்.

31—12—1920ல் சென்னைமா நகரின்கண் முத்தையா முதலித் தெரு 13 நெ. வீட்டில் அமைத்துள்ள வீரசைவ மாணவர் விடுதியில் இச்சங்கத்தின் சார்பாக வெளியூர் விருந்தினர்க்கு விருந்தளிப்புக் கூட்டமொன்று நடைபெற்றது. அவ்வமயம் நிரந்தரத்தலைவர் திருவாளர் **S. C.** நரசி செட்டியார் அவர்கள் தலைமை வகித்தார்கள். பெல்காம் **G. A.** ஹைஸ்கூல் பிரின்ஸிபால் முதலிய வடநாட்டுப் பெரியார் பலரும், முசிரி ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் முதலிய தமிழ் நாட்டுப் பெரியார் சிலரும் விஜயம் செய்திருந்தார்கள். சென்னைமா நகரத்தின்கண் வீரசைவ மாணவர் விடுதி ஏற்படுத்த வேண்டியதன் அவசியத்தையும், நடபெற வேண்டிய முறையையும் பற்றித் தலைவர் முதலிய சிலர் அழகுபெற விளங்கப் பேசினார்கள். காரியதரிசி **H. K.** குருபசவராஜ, **B. A.** அவர்கள் வந்திருந்த வீரசைவ கனவான்களுக்கு வந்தனங்கூறி மாணவர் விடுதிக்கான உபகாரங்களைச் செயயவேண்டு மென வேண்டிக்கொண்டனர். இவ்விடுதியில் வெளியூரிலிருந்துவரும் வீரசைவர்கட்கும் உணவு முதலிய வசதிகள் செய்து கொடுக்கப் பெறும். சுபம்.

ஓர் வீரசைவப் பெரியாரின் விஜயம்.

பெங்களூர் இராஜ சபாபூஷண, திவான் பகதூர், சர். கெ. பி. புட்டண்ண செட்டியார், C. I. E. அவர்கள் தமது மனைவியார் ஸ்ரீமதி பார்வதம்மணி அவர்களுடன் உடல்நலங்கருதி பாண்டிச்சேரியிற்றங்கி 26—12—1929ல் பொம்மபுரம் மடாலயத்திற்கு விஜயஞ்செய்து, உப சாரத்துடன் வரவேற்கப்பெற்று, 18-வது பட்டம் ஸ்ரீமத் சிவஞான பாலைய சுவாமிகளைத் தரிசித்து, சந்நிதானத்தின் கருணைக்குப் பாத்

திராகி மடாலயத்தின் பிரபாவமனைத்தையும் உணர்ந்து, ஒடுக்கத் தரிசனமுஞ்செய்து அன்று முற்றிலுந் தங்கியிருந்து சிவபூசை முத வியன முடித்துக்கொண்டு விடைபெற்றுத் தமது காரில் புதுவைக்குச் சென்றூர்கள். கனம் செட்டியார் அவர்கள் தமிழ்நாட்டில் இத்தகைய வீரசைவ மடமும் அபிமானிகளும் இருக்கிறூர்களென்பதை வடநாட் டாராகிய யாங்கள் இதுவரை அறியாதிருந்ததும், அறிவிக்காதிருந்த தும் ஒருகுறைவே! இன்று சுவாமிகளைத் தரிசித்து மடாலயத்தின் விருந்தினர்களானமையால் யாங்கள் பாக்கியசாலிகளாயினேம். இனி பரஸ்பர அன்பும் அருளுமிருக்க வேண்டுமெனத் தமிழால் பேசினர் கள். சுவாமிகளும் ஆசீர்வதித்தார்கள், அங்கு வந்திருந்த வீரசைவம் பத்திராசிரியர் மடாவயத்தின் பெருமையைக்கூறி செட்டியார் அவர் கட்கும் அவரது பத்தினியார் அவர்கட்கும் முகமன்கூறி மகிழ்வித்த னர். செட்டியார் அவர்கள் பங்களாவில் தமிழ்நாட்டு வீரசைவர்கட்கு சிற்றுண்டி விருந்தளித்து மகிழ்வித்லார்கள்.

ஸ்ரீமத் முருக விருஷபேந்திர மகாசுவாமிகள் விஜயம்

இந்த மகாசுவாமிகள் சித்திரகல்துருகம் மடாலயத்தில் இளமை யிலேயே விரக்தி ஆச்சிரமம் பெற்றுத் தமிழ், கனனடங்களிலுள்ள வீரசைவ கிரந்தங்களையுணர்ந்து விளங்க எடுத்துரைக்கும் ஆற்றலும் விரதமும் உடையவர்கள். இவர்கள் இத்தைமாதமுதல் இந்நாட்டில் வீரசைவ சமயாசாரச் சீர்திருத்தங்களைச் செய்தற்பொருட்டு இந்நாட் டில் சஞ்சாரஞ் செய்துவருகினறூர்கள். இப்பொழுது முசிரியினின் றும் சென்று திருத்தலையூரில் எழுந்தருளியுள்ளார்கள். அதினின்றும் இரண்டொரு தினத்தில் பிரயாணஞ் செய்தருளுவார்கள்.

மதாபிமானி.

நன்கொடை.

சுக்கிலஹு ஐப்பசிமீ 23௳ லால்குடி தாலூகா, வெள்ளைக்கற்பட்டி கிராமத்தில் நடைபெற்ற திருவாளர் கந்தசாமி ஐயர் அவர்கள், தமது குமாரர் பாலசுப்பிரமணிய ஐயர் கல்யாண வைபவத்தில் மகாசங்கத்திற்கு சமர்ப்பித்தது ரூ 2-0-0, சுக்கிலஹு மார்கழிமீ 13௳ ஷெ கந்தசாமி ஐயர் கணாராதனையில் மகா சங்கத்திற்குச் சமர்ப்பித்தது ரூ 0-8-0. சுக்கிலஹு மார்கழிமீ 18௳ உத்தமாங்குடி திருவாளர் பெரியசாமி ஐயர் அவர்கள் புதல்வி இலிங்கதாரண வைபத்தில் மகா சங்கத்திற்குச் சமர்ப்பித்தது ரூ 1-0-0 ஆக ரூபாய் மூன்றரையும் கீழ்வட்டகைக் காரியதரிசி திருவாளர் P. கல்யாண வீரையரவர்கள் துவாராவாக அனுப்பப்பெற்றன.

சுக்கிலஹு மார்கழிமாதத்தில் லால்குடி தாலூகா குமுளூர் திருவாளர் சபாபதி ஐயரவர்கள் தமது குமாரன் இலிங்கதாரண வைபத்தில் நமது பத்திரிகைக்காகக் கொடுத்தது ரூ 1-0-0. இந்த ரூபாய் ஒன்று பெருவளநல்லூர் திருவாளர் வைத்திலிங்க ஐயர் அவர்களால் அனுப்பப்பெற்றது.

சுக்கிலஹு தைமீ 6௳ எருமனூரிலிருக்கும் திருவாளர் விருத்தாசலம் V. K. கந்தசாமி ஐயர் அவர்கள் தமது மனைவியாருக்கு 8-வது மாதத்தில் வீரசைவாசார விதிப்படி கர்ப்ப லிங்கதாரணஞ் செய்வித்து, 10-வது மாதத்தில் பிறந்த பெண்குழந்தைக்குச் சமஸ்கார முறைப்படிச் செய்வித்த ஜாதகர்ம லிங்கதாரண வைபவத்தில் மகா சங்கத்திற்காகச் சமர்ப்பித்தது ரூ 2-0-0. இந்த ரூபாயை மணியார்டர் மூலமாகக் காரியதரிசிக்கு நேரில் அனுப்பித்துள்ளார்கள்.

சிதம்பரம் தாலூகா ம. அரசூரிலிருக்கும் நமது பத்திரிகையின் தொண்டருள் ஒருவரான திருவாளர் S. தியாகராஜய்யர் அவர்கள் நமது பத்திரிகையின் வளர்ச்சிக்காக சுக்கிலஹு கார்த்திகைமாதம் சோமவார தினந்தன்று தாம் எடுத்துக்கொண்ட சோமவார விரதத்தில் உண்டிகைக் கலயமொன்று வைத்திருப்பதாகவும், மாதாமாதம் சோமவாரந்தோறும் தம்மாலியன்ற காணிக்கையை அதில் போட்டு வருவதாகவும், வருஷமுடிவில் அவ்வுண்டிகையிற் சேரும் பொருளை யெடுத்து நமது வீரசைவப் பத்திரிகையின் மூலதனத்திற்கு உதவுவதாகவும், இம்முறையை வீரசைவாபிமானிகள் பலர் கைக்கொள்வார்களானால் பொதுநலத்திற்குப் பலதுளி பெருவெள்ளமாகலாம் எனவும், கடிதமூலத்தில் தெரிவித்துள்ளார்கள். இத்தகைய நன்கொடையைச்செய்ய முன்வந்த பெரியார்க்கு இறைவன் அருள்புரிவாராக.

தமிழ்நாட்டு
வீரசைவ சித்தாந்த மகாசங்கம்.

நிறைவேற்றுக் கழகத்தின் பொறுப்பாளர்க் கூட்டம்.

சங்காபிமானப் பெரியோர்களே!

நமது சங்கத்தின் 7-வது ஆண்டுவிழாவை 1930 மே, கோடைவிடு முறையில் 'மகாகாணக்கூட்ட'மாக நடத்த இடம், தலைவர், நிறைவேற்றப்பெறும் தீர்மானங்கள் முதலியவற்றை ஆராய்ந்து முடிவுசெய்வதற்கும், வேறு சில முக்கியமானவற்றை ஆராய்வதற்கும் வழக்கம்போல் வருடந்தோறும் கூடப்பெறும் பொறுப்பாளர்க் கூட்டம் நாளது பங்குனிமீ 23, 24உ சனி, ஞாயிறுகளில் (5, 6-4-1930) பெரம்பலூர் தாலூகா, செட்டிக்குளம் மலையடிவாரம் வீரசைவ மண்டபத்தில் கூடப்பெறும். அங்கு அவ்வமயம் எல்லா வட்டகைப் பொறுப்பாளர்களும், காரியதரிசிகளும் அன்று காலை 10 மணிக்குள் இதனையே அழைப்பாகக் கருதி எழுந்தருளுதல் வேண்டும். தீர்மானங்களைக் கொண்டுவருவோர் அதனை ஒரு வாரத்திற்குமுன் காரியதரிசிக்காவது, நேரிலாவது சேர்ப்பித்தல் வேண்டும்.

இந்த வருடத்துடன் மூன்று வருடங்கள் முடிகின்றமையின் முறைப்படிப் பொறுப்பாளர்த் தேர்தல் நடைபெறும். ஒவ்வொரு வட்டகையிலும் பொறுப்பாளர்த் தானத்தை விரும்புவோர் இக்கூட்டத்திற்குள் எழுத்துமூலத்தில் அறிவித்துக்கொண்டு, சமய முன்னேற்றத்திற்குழைக்க முன்வர வேண்டுமென எதிர்பார்க்கின்றோம்.

இங்ஙனம்

தலைமைக் காரியதரிசி,

முசிறி.

சந்தா விவரம்.

ஆயுட் சந்தா	ரூ. 25-0-0	மாணவர் சந்தா	ரூ. 1-8-0
ஆண்டுச் சந்தா	,, 2-0-0	தனி இதழ் 1-க்கு	,, 0-4-0

சித்தியானந்த அச்சுக்கூடம், துறையூர்.